Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

மலர் 31 | ஹேவிளம்பி தை 1958 ஜனவரி | இதழ் 1

திருமயிலாப்பூரில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

ஐம்பத்திரண்டாம் ஆண்டு விழாவில்

திரு. மயிலைகிழார் இளமுருகனார் அவர்கள்

27-12-1957-ல் நிகழ்த்திய

தலைமைப் பேருரை

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

சைவ ஒழுக்கத்தில் தலைசிறந்து விளங்கும் மெய்யன்பர்களே! எனது அருமைச் சகோதரி சகோதரர்களே! அடியேனது தாழ்மையான வணக்கத்தை உங்களுக்குச் செலுத்துகின்றேன். 1944-ம் ஆண்டில் பள்ளத்தூரிலும், 1948-ல் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற சமாஜ ஆண்டு விழாக்களில் தலைமை வகித்த என்னை, மீண்டும் ஒருமுறை தலைமை வகிக்கப் பணித்த உங்களுடைய பெருங்கருணையைக் கட்டளையாகவே சிரமேற்கொள்கின்றேன். தலைமைக்குரிய தகுதி என்பால் இல்லையென்பது நீங்களும் நானும் நன்கறிந்ததொன்றேயாயினும், உங்களுடைய அன்பு வலையில் சிக்கிக்கொண்ட எனக்கு என்ன சுதந்திரம் உளது? குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கையுடைய நீங்கள் என் பேச்சிலுள்ள குற்றங்களைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

2. நமது சமாஜம் 52 ஆண்டுகள் நிரம்பியும், இந்த ஆண்டில் தான் நிறைவு விழா திருமயிலாப்பூரில் நடக்கிறது. இதில் ஒரு தனிச்சிறப்புண்டு. 52-ம் ஆண்டுகளின் அனுபவம் நிறைந்த பிறகே, இந்தத் திருத்தலத்தில் ஆண்டுவிழா நடத்தற்குரிய தகுதி நமது சமாஜத்திற்கேற்பட்டுள்ளதென, இத்தல வாசிகள் கருதுகின்றனர் போலும். 1916-ம் ஆண்டில், மயிலாப்பூரின் வடஎல்லையில் வசித்த இராஜா கிராமணியார் தோட்டத்தில், யாழ்ப்பாண நகர்வாசியான முதலியார் சபாரத்தினம் அவர்கள் தலைமையில் சமாஜ ஆண்டுவிழா நடந்தது. ஆனால் இப்போதுதான் மயிலாப்பூரின் மத்தியில், திருக்கபாலீச்சரம், வெள்ளீச்சரம் ஆகிய இரு சிவாலயங்களின் அருகில் சமாஜ ஆண்டுவிழா நடக்கிறது. மற்றொரு பொருத்தம் என் நினைவிற்கு இயற்கையாக வருகின்றது. எண்ணிலாத நெடுங்காலம் பற்பல தலைமுறைகளாக, எங்கள் குடும்பம் மயிலாப்பூரில் இருந்து வருகிறது. திருமயிலாப்பூரில் ஏழு சிவாலயங்கள், சில வைணவ ஆலயங்கள், பற்பல விநாயகர் கோயில்கள் விளங்குகின்றன. திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியைக் குறிக்கும்போது, " தேனமர்சோலை மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி " என்கிறார். தேவார முதலிகள் மூவர் திருவாக்கிலும் மயிலாப்பூர் புகழப்பெறுகின்றது.

3. பூம்பாவைத் திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தர், " மட்டிட்ட புன்னையங்கானல் மடமயிலைக் கட்டு இட்டம் கொண்டான் கபாலீச்சரம், மாமயிலை வண்மறுகில் துளக்கில் கபாலீச்சரம், ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை, கார்தரு சோலைக் கபாலீச்சரம், மடலார்ந்த தெங்கின்மயிலை, மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை, கண்ணார் மயிலைக் கபாலீச்சரம், கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம், கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம், கானமர்சோலைக் கபாலீச்சரம்" என்று புகழ்கின்றார். சோலைகளுட் பெரும்பாலன இப்போது மாளிகைகளாக மாறிவிட்டன. அப்பர் சுவாமிகள் திருத்தாண்டகங்களில், " மங்குல் மதி தவழும் மாடவீதி மயிலாப்பு, மயிலாப்பில் மன்னினார் மன்னியேத்தும் பெருநீர் வளர் சடையான் எதிர் கண்டோம் மயிலாப்புள்ளே, கல்லாடை புனைந்தருளு

கபாலிஸ்யக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே" என்ற குறிப்புக்கள் உள்ளன. அப்பர் பெருமான் திருமயிலாப்பூரைத் தரிசித்துப் பதிகம் பாடினார் என்பதைச் சேக்கிழார் "தரைவளர் சீர்த் திருமயிலை சங்கரனார் தாள்வணங்கி உரைவளர் மாலைகள் அணிவித்து உழவாரப் படையாளி" என்று குறிக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கில் "துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித் தொன் மயிலை" எனும் குறிப்பு நயமாக வருகிறது. கடல் துறையில் பவளங்கள் ஒதுக்கப்படுவதால் இருள் அகல்கின்றது என்பது இயற்கை வர்ணனை. செம்பவளத் திருவுருக் கொண்ட கபாலீஸ்வரர் அருள் வழங்கும் துறையாகத் திருக்கோயில்கொண்டெழுந்தருளி, ஆன்மாக்கள் ஆணவ இருளை அகற்றும் தொன்மயிலை என்ற பொருளும் தொனிக்கிறது.

4. மயிலாப்பூருக்கு வேறொரு சிறப்பும் உண்டு. உலகப் பொதுமறையாகிய "திருக்குறள்" ஆசிரியர் திருவள்ளுவர் வாழ்ந்த திருத்தலம் திருமயிலையே. இவர் திருக்கோயில் கபாலீச்சரத்திற்கு வடக்கே அரை மைல் தொலைவிலுள்ளது. தமிழ் நூல்களுள் எழுபது வேற்று மொழிகளுள் மொழிபெயர்க்கப் பெற்றது திருக்குறள் ஒன்றே. இதற்குப் பதின்மர் உரை வகுத்தனர். இவ்வாண்டில் வெளிவந்த "முதற்குறள் உவமை" என்ற அரிய நூலில் பல நுட்பங்களைக் காணலாம். மானஸீக பூஜை செய்து முத்தி பெற்ற வாயிலார் நாயனார் திருஅவதாரத் தலமும் திருமயிலையே. பேயாழ்வார் அவதரித்ததும் திருமயிலையே. இத்தகைய பெருமைகளையுடைய திருமயிலையில் கபாலீச்சரத்தருகில் நமது சமாஜ விழா நிகழ்வதும் சமாஜத்தின் பெரிய பேறென்றே கருதத்தகும். மயிலாப்பூரில் நடக்கும் சமாஜ விழாவிற்கு மயிலாப்பூரில் பிறந்து வளர்ந்த நான் தலைமை வகிப்பது, எனக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. அடக்க விலைச் சுத்த பதிப்பாக நமது சமாஜம் முதன் முதல் சுந்தரர் தேவாரத்தைத் திருமயிலைக் கபாலீச்சரத்தில் தான் வெளியிட்டது. சமாஜக் காரியாலயம் பல ஆண்டுகள் திருமயிலையிலேயே இருந்தது. சில விசேஷ மாநாடுகளும், பல திருவிழாச் சொற்பொழிவுகளும் இங்கேயே நடந்தேறின.

5. திருமயிலையில் பல புலவர் பெருமக்கள் அவ்வப் போது வாழ்ந்து தொண்டாற்றி வந்துள்ளனர். திருவள்ளு வரைப்பற்றி மேலே கண்டோம். தாச்சி அருணாசல முதலியார் என்ற புலவர் பல நூல்களை இயற்றினார். கபாலீசர் மீதும் கற்பகவல்லி மீதும் பல பாடல்களை உருக்கத்தோடு பாடினார். அவை சாது அச்சுக்கூடத்தில் பல வருடங்கட்குமுன் அச் சிடப்பெற்றன. யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி கதிரைவேற் பிள்ளையவர்கள் மயிலாப்பூரில் தொடர்ச்சியாகப் பல சொற் பொழிகள் செய்தார். பிரசங்க சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் அவர்களும் ஆலாலசுந்தரம் பிள்ளையவர்களும் சுவாமி நாத பண்டிதரவர்களும் பற்பல சொற்பொழிவுகள் செய்தனர். ஆறுமுக நாவலர் சீடரான மகா வித்வான் தணிகாசல முதலி யார் தமது முதிர்ந்த பருவத்திலும், சிவஞான சாத்திரங்களை மாணவர்கள் பக்குவத்திற்கேற்றபடி பாடமாகச் சொல்லி வந் தனர். வித்வான் சண்முகம் பிள்ளையவர்கள் "திருமுல்லைவாயிற் புராணம்" முதலிய நூல்களை யாத்தனர். இவருடைய மாணாக் கர் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்கள் மயிலாப்பூரில் "கட லகம்" எனும் மாளிகையில் வசித்துப் பல தமிழ் நூல்களை வெளியிட்டனர். குன்றக்குடிக் கிளை மடத்திலிருந்த பெரியார் அமிர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தமிழில் திருமயிலைத் தலபுராணம் பாடினார். இப்போது அப்புராணத்தின் அச்சுப் பிரதி ஒன்றுகூட விலைக்குக் கிடைக்காது. திருக்கபாலீச்சர தருமகருத்தர்களும் அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனரும் இதை உடனே கவனித்துப் புதிய பதிப்பை வெளியிட முன் வருவார்களாக. சென்னை மாநகரில் "விநாயக புராணம்" அரங்கேறிய கோயில் செல்வ நிலையிலுள்ளது. அப்புராணப் பிரதி ஒன்றுகூட விலைக்குக் கிடைக்காது. இந்நூலின் புதிய பதிப்பு ஒன்றும் விரைவில் வெளிவரவேண்டும்.

6. மேற் கூறியபடி வாழையடி வாழையெனப் பேரறிஞர் பலர் திருமயிலாப்பூரில் சைவத்தை வளர்த்து வந் துள்ளனர். தலைமை யுரையில் திருமயிலையின் சிறப்பையே மேன்மேலும் விரித்துரைக்க வேட்கை மிக்கவனாயினும், முக்கியமான பல பொருள்களைப் பற்றிக் கூறவேண்டியது

அவசியமாகையால் இவ்வளவில் விடுகின்றேன். சைவக் குடும்பத்திற் பிறந்த ஒவ்வொருவரும், பன்னிரண்டு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் இடைவிடாது பயிலுதல் வேண்டும். இளமையிலேயே எனக்கு இப்பயிற்சியைத் தந்த எனது தந்தையாருக்கும் தாய்வழிச் சிறிய பாட்டனார் நித்தியாநந்த முதலியாருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். மேற்கூறிய பாட்டனார் சொற்பொழிவுப் பயிற்சியையும் எனக்குத் தந்தார். நூற்பயிற்சி மட்டும் போதும் என்றெண்ணுதல் கூடாது. நாள்தோறும் சைவ ஒழுக்கம் நிறைந்த சமய வாழ்க்கை நடத்துதல் வேண்டும். நித்திரை விட்டெழுந்தவுடன் அரை நிமிஷமாவது கடவுளைப் போற்றவேண்டும். பிறகு காலைக் கடன்களை முடித்து நீராடிப் பூசை செய்தல் வேண்டும். பிறகு இயன்ற அளவு திருமுறைகளையும், திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தர் கலிவெண்பா முதலிய அருள் நூல்களையும் பாராயணம் செய்யவேண்டும். முடிந்தால் நாடோறும், இயலாவிடில் முக்கிய நாட்களில் திருக்கோயில் வழிபாடு செய்தல்வேண்டும். எனது தந்தையார் நாடோறும் திருக்கபாலீச்சரத்தில் அர்த்தஜாம பூசை தீபாராதனை தரிசிக்கும் பழக்கமுடையவர். சைவ வாழ்க்கைக்கு இன்றியமையாதது புலால் மறுத்தல். எக்காரணத்தாலும் மரக்கறி யுணவைத் தவிர புலால் கலந்த உணவை உட்கொள்ளுதல் கூடாது. இக்காலத்தில் சில வைத்தியர்கள் முட்டை புலால் உணவல்லவென்றெண்ணி, நோயாளிகட்கு அதைச் சேர்த்துக் கொள்ளச் சொல்கின்றனர். இது பெருந் தவறு. புலால் மறுத்தலால் எத்தனை குணக்கேடுகள் நீங்கும், எத்தனை நன்மைகள் விளையும் என்பதைச் சில நாட்களுக்கு முன் சென்னைமாநகரில் நடந்த (Vegetarian Congress) நிகழ்ச்சிகளிலும் சொற்பொழிவுகளிலும் காணலாம். ஐரோப்பியர் அமெரிக்கர் முதலியோரும் இதிற் கலந்துகொண்டனர். சைவ ஒழுக்கமுள்ள ஒருவர் வாழ்க்கை நாட்டுக்கே எடுத்துக் காட்டாக விளங்கும். சைவத்தில் பிறக்க மிக்க தவம் செய்திருக்கவேண்டும். சிவஞான சித்தியாரில் “நரர்பயில்”,

"வாழ்வெனும்" எனத் தொடங்கும் செய்யுட்களில் இதைக் காணலாம்.

7. சைவ சித்தாந்தத்தின் அடிப்படை எல்லோரும் நன்கறிந்தது. அறிவு எனும் அளவுகோலால் மூன்று பொருள் களின் பாகுபாட்டை உணரலாம். அறிவிக்காமலே அறிபவன் பதி, அறிவித்தால் அறிவது இன்றேல் அறியாதது பசு, அறி வித்தாலும் அறியாதது பாசம். பதி பசு பாசம் ஆகிய மூன்றும் அநாதிநித்யப் பொருள்கள். பதியின் அருளால் பாசத் திலிருந்து விடுபட்ட பசு, பதியின் திருவடி சேர்ந்து அங்கு இன்பம் அனுபவிக்கும் உணர்ச்சியோடு இரண்டறக் கலந்து அழியாமல் என்றும் இருக்கிறது. பாசம் அந்தப் பசுவை அடியோடு விட்டகன்ற போதிலும், ஏனைய கோடிக்கணக் கான கட்டுண்ட ஆன்மாக்களோடு கலந்திருப்பதால் அந்த பாசத்திற்கும் அழிவில்லை. பதி பாச பசு இலக்கணம், திருவடி முத்திபெறும் சாதனவகைகள் முதலிய பலபொருள் களைச் சிவஞான சித்தியார் விரிவாகக் கூறுகின்றது. சித்தியார் சுபக்கம் பரபக்கம் என்று இரு கூறுடையது. சுபக்கத்திற்கு ஆறு பேரறிஞர்கள் உரை செய்துள்ளனர். இவ்வறுவர் உரை சுமார் நூறுண்டுகட்குமுன் சென்னையில் அச்சிட்டு வெளியா யிற்று. சண்முகசுந்தர முதலியார் என்ற பெரியார் வெளி யிட்டனர். மறு பதிப்பு வெளியிட சைவத்திரு மடங்கள் விரைதல் வேண்டும். திருமுறைகளையும் பதினன்கு சாத்திரங் களின் மூலத்தையும் உரையையும், சிவஞான பாடியத்தையும், திருப்புகழ் திருப்போரூர் சந்நிதிமுறை முதலிய அருள் நூல் களையும் நமது சமாஜம் அடக்கவிலைச் சுத்தப் பதிப்புக்களாக வெளியிட்டு வழிகாட்டியுள்ளது என்பதை நாம் ஞாபகத்தில் வைத்தல் நலம்.

8. சித்தாந்த சாத்திரங்களை மிக நன்றாகப் பயிலுதல் வேண்டும். சாத்திர நுட்பங்கள் ஆயிரக்கணக்கானவை. இவைகளைச் சரியான முறையில் பாடமாகச் சொல்லக்கூடிய ஆசிரியர்களின் தொகை தற்போது விரல் விட்டெண்ணலாம் எனும்படி குறைந்துள்ளது. நமது சமாஜம் அவ்வப்போது நடத்தி வந்த கோடைக்கால வகுப்புக்கள் ஒன்றில், "கண்

இந்திரியம் நின்று பற்றும் கருவி யல்ல, சென்று பற்றும் கருவி" என்று சிவஞான சுவாமிகள் கூறுவதைத் தழுவாது பாடம் நடத்திய ஒருவர் கலவரத்தை உண்டாக்கினர். மற்றொரு கோடை வகுப்பில் ஒரு சைவப்பெரியார், பதினன்கு சாத்திரங்களுள் ஒன்றாகிய உண்மை விளக்கத்தில் "முத்தி தனில் மூன்று முதலும்" எனும் பாடலில் "இத்தை விளைவித்தல் மலம்" என்பதற்கு "பெத்தான்மாக்களிடத்தில் மறைப்புத் தொழில் செய்யும் மலம், முத்தியில் விளக்கம் செய்யும்" என்று விபரீத உரை கூறினர். இது தவறு, பெருத்தவறு. சித்தியார் சுபக்கம் 11·6-ம் பாடல் "நெல்லினுக்குத் தவிடுமிகள்" எனத் தொடங்கும். இதற்கு உரை வகுத்த மாதவச் சிவஞான யோகிகள் "அநாதியே உயிர்களோடு சகசமாய் நின்ற மும்மலங்களும் முத்தி நிலைக்கண் விண்டொழியும் என்றே கொள்க. ஆண்டு விண்டொழியினும் ஏனைப் பெத்தரிடத்துக் காணப்படுதலால் அவை நித்தப் பொருளாதற்கும் இழுக்கில்லை" என்பதோடு, "இத்தை விளைவித்தல் மலம்" என்பதை அநுபலத்தி ஏதுவாற் கொள்க என்றும் விளக்குகிறார். அநுபலத்தி ஏதுவென்பது ஒன்று இல்லாமையிலிருந்து அதன் காரணமாகிய மற்றொன்று இல்லையென்று ஊகிக்கும் தர்க்கமுறை. உதாரணமாகக் குளிர் இன்மையிலிருந்து பனியின்மை, குளம் வற்றி நீரின்மையிலிருந்து மழையின்மை, புகையின்மையிலிருந்து நெருப்பின்மை முதலியவற்றை ஊகித்தல் (லப்தி, உபலப்தி, அநுபலப்தி 3 படிகள்). நிழலின் அருமை வெயிலில் நின்றவனுக்கே தெரிதல்போல, மலத்தின் வன்மையால் கட்டுண்டு துன்புற்றவனுக்கே. முத்தியின்பத்தின் அருமை தெரியும் என்ற பொருளில் "இத்தை விளைவித்தல் மலம்" எனும் சொற்றொடர் நிற்கிறது. "மாமலையாள் மணவாளன் மலர்க் கழல் வந்தடையும் இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர் செய் குறை என்கொல் எனத் தொழுவார்" என்று சூலை நோயினுக்கு நாவுக்கரசர் வணக்கம் செலுத்தியதை நோக்குக.

9. இதைப் போலவே அத்துவிதம் எனும் சொல்லில் "அ" என்பதற்குள்ள இன்மை அன்மை மறுதலை ஆகிய

மூன்று வகையான அர்த்தங்களுள், ஏகான்ம வாதிகளும் வைணவர்களும் கூறும் இன்மைப் பொருளையும் துவைதிகள் கூறும் மறுதலைப் பொருளையும் பூர்வபக்ஷம் செய்து அன்மைப் பொருளே சைவ சித்தாந்திகள் கூறும் உண்மைப் பொருள் என மெய்கண்டார் உபதேசிப்பதை உணர்தல் வேண்டும். "பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய் கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ" என்று தாயுமான சுவாமிகளும் இதைப் புகழ்கின்றார். ஆணவம் ஆன்மாவின் இயற்கைக் குற்றம் அல்ல, அநாதி சேர்க்கைப் பொருள் என்பதன் உட்கருத்தை அறிதல் வேண்டும். இயற்கை மாறாது. களாப் பழத்தின் கறுப்பும் கொக்கின் வெண்மையும் செம்பருத்தி மலரின் சிவப்பும் மாறாதவைபோல. அநாதிகாலமாக உயிரோடு ஆணவம் சேர்ந்திருப்பினும் கடவுளருளால் அது அடியோடு ஒழிந்துவிடும். ஆகையால் அதை அநாதி சேர்க்கை என்பர். சித்தாந்திகள் இங்கு ஆணவத்தைச் சேர்த்தது யார் என்பதற்குத்தெரியாது என்று விடை கூறாமல் சாதுரியமாகச் சொல்வதைக் காண்க. "கடவுள் கருணையுடையவர், ஆனமாக்களுக்குத் தீய மலத்தைச் சேர்க்கமாட்டார். உயிர் தீங்குள்ள மலத்தைச் சேர்க்காது, மலம் ஜடப்பொருளாகையால் ஒன்றைச் சேரும் ஆற்றலற்றது. ஆனால் ஆன்மாவோடு மலம் சேர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் அது அநாதி சேர்க்கைப் பொருள்" என்று கூறுவர். ஆணவத்திற்கு மூலமலம் என்று பெயர். அதைப் போக்குதற்குக் கடவுள் கன்ம மலம் மாயாமலம் ஆகிய இரண்டைச் சேர்க்கிறார். வண்ணான் அழுக்குத்துணியிலுள்ள அழுக்கை ஒழித்தற்கு உவர்மண் சாணம் முதலிய அழுக்குகளைச் சேர்த்து சலவை செய்து அழுக்கைப் போக்குகிறான் என்ற உவமையின் அழகைக் காண்க. கன்மங்கள் தாமே ஆன்மாவை அடையும், அதற்கொரு கடவுள் வேண்டாம் என்பர் சில சமயவாதிகள். சித்தாந்திகள் இதை ஒப்புக்கொள்வதில்லை. கன்மங்களை மூன்று வகையாகப் பிரித்து சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் (பழவினை நிகழ்வினை மேல்வினை) என்பவற்றுள், கருணை மிகுதியால் கடவுள் ஒரு சிறிய

அளவையே இப்பிறவியில் நுகர்தற்குத் தருகிறார். தன் முனைப்பற்ற வாழ்க்கையால் பிராரப்தம் ஒழியும். தீவினை வருங்கால் தீமைசெய்தவனுக்கு ஒன்றுக்குப் பத்தாகப் பதில் தீமை செய்வதை ஒழிக்கவேண்டும். "ஞானமிர்தம்" எனும் அரிய சாத்திர நூலாசிரியர் ஒரு அழகான உவமை கூறுகிறார். ஒருவன் ஒரு நாய்மேல் கல்லை யெறிகிறான். நாய் கல்லை விட்டு விட்டு எறிந்தவன்மேல் பாய்கிறது. நாயுக்குள்ள இந்த அறிவுகூட மக்களுக்கில்லை. நமது பழவினையால் அல்லவா இந்த தீமை வந்தது. தீமை கல்லைப்போல, பழவினை எறிந்த வனைப்போல என்றெண்ணினால் மேல்வினை நிகழாது. எல்லாம் கடவுள் வகுத்த திட்டம் என்று மனம் அமைதி பெறல் வேண்டும். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்" என மேலும் ஒரு படி செல்கிறது திருக்குறள். மகேந்திரவர்ம பல்லவன் செய்த கொடுமைகளை யெல்லாம் அப்பர் அடியோடு மறந்துவிட்டார். அவன் தம் திருவடியில் விழுந்து மன்னிப்புக் கோரியபோது அவன் தீமையொன்றும் செய்யவில்லை யென்றே அவனை மன்னிக்கிறார். கடவுள் அருள் நோக்கால் எல்லா வினைகளையும் வெல்லலாம்.

10. திருக்கோயில் வழிபாடு ஒரு சைவன் கடமைகளுள் ஒன்றெனமேலே கூறினேன். அது மிக மிக அவசியம் என்பதை மெய்கண்டார் இறுதிச் சூத்திரத்தில் உபதேசிக்கிறார். "மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன்எனத் தொழுமே" என்பதை நோக்குக. திருக்கோயில் வழிபாட்டினால் சைவர்கள் அடையும் பலன் மிக மிகப் பெரிது. திருக்கோயிலின் அமைப்பு மனித உடம்பைப் போன்றது. "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக...மனமணி இலிங்கமாக" அப்பர் தேவாரம் (4897) முதலிய பற்பல குறிப்புக்கள் உண்டு. "மறவாமை யானமைத்த மனக்கோயிலுள்ளிருத்தி......அர்ச்சனை செய்வார்" எனும் வாயிலார் நாயனார் அகப் பூசைச் சிறப்பு திருமயிலையில் நிகழ்ந்தது. சரியை கிரியை யோகம் ஞானம் எனும் நான்கு படிகளில் முறையே நிற்கிற எல்லா ஆன்மாக்களுக்கும் கோயில் வழிபாடு எவ்வாறு நன்மை தருகிறதெனும் தத்துவத்தை, சித்தி

யார் 12-ம் சூத்திரத்திலுள்ள " திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் ஆங்கே" எனும் பாடல் விளக்குகின்றது. சிவஞானம் மிக்கவர்களும் ஆலய வழிபாடு செய்தல்வேண்டும். கீழ்ப்படிகளிலுள்ளவர்கட்கே ஆலய வழிபாடு தேவையென்று நினைப்பது பெரும் பாவம். சிலர் அகம்பாவத்தோடு " எங்களுக்குக் கோயில் வழிபாடு வேண்டாம், அதற்கு மேலான நிலையிலுள்ளோம்" என்று பிதற்றுவர். சமய குரவர் நால்வரை விடச் சிறந்த ஞானிகள் சைவத்தில் இலர். அவர்கள் தமிழ்நாடு முழுமையும் பற்பல தலங்கட்குச் சென்று தரிசித்து ஆநந்த பரவச நிலையில் பதிகங்களை அருளிச் செய்தார்கள். சமாஜ ஆண்டு விழாக்களின் அங்கமாகத் திருக்கோயில் வழிபாட்டை நாம் கொண்டுள்ளோம்.

11. கோயிலில் உள்ள திருவுருவங்கள் எல்லாம் தத்துவம் நிறைந்தவை. விநாயகர் முருகர் உருவ நுட்பங்களை இவ்வாண்டில் வெளிவந்த ஞானியார் நினைவு மலர்க் கட்டுரைகளிற் காணலாம். கூத்தப்பிரான் உருவில் ஐந்தெழுத்தும் ஐந்தொழில்களும் அமைந்துள்ளன. சிவலிங்கத்தின் தத்துவச் சிறப்பை "சத்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலகம் எல்லாம்...பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்" (சித்தியார் 1-69) எனும் பாடலிற் காண்க. இதை யறியாத மூடர்கள் சிவலிங்கம் ஆண் பெண் புணர்ச்சியின் வடிவம் (Phallic symbol) என்று பிதற்றுவர். இவ்வாறே சோமாஸ்கந்தர் திருவுருவில் இடப்பாகத்துள்ள அம்மை கூத்தியார் என்றும், தனியே வருகிற அம்மை ஒதுக்கப்பட்ட மனைவியென்றும் உளறுவர். இவ்வாறே முருகப்பிரான் சக்திகளுள் ஒன்று கூத்தி மற்றொன்று மனைவி என்பர். காரைக்காலம்மை 63 பிள்ளைகளைப் பெற்றும் திருப்தி பெறாது மேலும் ஒரு பிள்ளைக்காகத் தவங் கிடக்கிறார் என்பர். பழைய காலத்தில் உத்ஸவங்களின் அங்கமாகப் பட்டிமண்டபங்களின் மீதேறி அறிஞர்கள் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். மணிமேகலை விழா அறை காதை 60, 61-ம் அடிகளில் "ஒட்டிய சமயத் துறு பொருள் வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்"

எனவரும் குறிப்பைக் காண்க. வாதவூரடிகள் திருவாக்கிலும் பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு வருகின்றது.

12. திருக்கோயில் வழிபாட்டில் பலர் பலபல தவறுகள் செய்கின்றனர். கோயிலை ஊர் வம்புகள் பேசுவதற்கு ஒரு சந்திப்பிடமாகக் கொள்வோர் சிலர். கபாலீச்சரத்தில் வாயிலார் நாயனார் கோயிலுக் கெதிரில் நாலுகால் மண்டபம் ஒன்றுளது. இதில் நாடோறும் "வம்பர் மகா சபை" கூடும். கோயில் வழிபாட்டிற்குச் சிறிதும் சம்பந்த மில்லாத வீண் பேச்சு மணிக்கணக்கில் நடக்கும். வெற்றிலை பாக்குமென்று எச்சில் உமிழ்தல், சிறுநீர் கழித்தல், குழந்தைகளை மலங் கழிக்க விடுதல் முதலிய பாவங்களைக் கண்கூடாகக் காணலாம். பக்தி மேலீட்டினால் வரும் பாவங்களும் உண்டு. அதிகமான கற்பூரத்தை ஏற்றி வைத்தமையால் சூடு தாங்காமல் நந்தி உருவத்தில் வெடிப்பு ஏற்பட்டதை ஒரு கோயிலிற் காணலாம். சண்டேசுவரர் செவிடர் என்று எண்ணி, அவரவர்கள் துணிகளில் ஒரு திரிநூலை யெடுத்து அவர் மீதெறிந்து காதுகேட்கச்செய்வதெனும் மூடப்பழக்கத்தையும் காணலாம். சிவயோகத் தமர்ந்து தொண்டர்க்கு நாயகமாகிய அவரிடம் சிவாலய தரிசன பலனை அர்ப்பணம் செய்தற்காகவே ஒருவர் காதிலும் கேளாதபடி ஒரு கைவிரலைத் தட்டி யெழுப்பும்முறை இவ்வாறு பாவச் செயலாக மாறிவிட்டது. சிவலிங்க மூர்த்திக்கும் நந்திக்கும் குறுக்கே போதல் தவறு என்பதை ஆயிரத்தில் ஒருவர்கூட அறிவதில்லை. ஆன்ம தரிசனத்தின் பிறகே சிவதரிசனம் எனும் சித்தாந்த நுட்பத்திற்கேற்ப முதலில் நந்தியைத் தரிசித்த பிறகே உட்சென்று சிவதரிசனம் செய்தல் வேண்டும். தீபாராதனை சமயத்தில் பிறரை மறைத்து சந்நிதியின் குறுக்கிலும் படிகள் மேலும் நின்று பாவம் செய்வோர் பலர். சிற்சில அதிகாரிகள் சுவாமி தரிசனத்திற்கு வரும் போது நூற்றுக்கணக்கான பக்தர்களைத் தடைப்படுத்தியும் வெளியே தள்ளியும் பாவம் செய்கிற கோயிலதிகாரிகள் பலர். அற்ப காரணங்களை முன்னிட்டு தர்மகர்த்தர்களுக்குள் பிளவு ஏற்படுதலும் அரசாங்கம் நியமிக்கும் இறைபணியாளர்கள் கட்சியில் ஒரு பக்கம் சார்தலும் சீர்கேடுநிகழ்தலும் உண்டு.

இவைகளெல்லாம் வெறுக்கத் தக்கவை, விரைவில் ஒழித்தற் குரியவை. சில கோயில்களில் நெருக்கடி நேரத்தில் அர்ச்சனை பேரளவில் நடப்பதைப் பார்த்தால் அர்ச்சனை செய்யாது, வெறும் தரிசனம் மட்டுமே செய்தல் நலம் எனத் தோன்றும்.

13. கோயில் வழிபாட்டில் இறைவன் சந்நிதியில் ஜாதி குலம் முதலிய வேறுபாடுகள் கிடையாது. ஆகமப் பிரமாணங்கள் சிலவற்றைக் காட்டி, இந்த வருணத்தினர் இந்த இந்த இடத்தில் நின்றுதான் தரிசிக்க வேண்டும் என்ற நிபந்தனை சிவாலயங்களில் உண்டு. விஷ்ணு கோயில்களில் மூலஸ்தான மூர்த்தியின் கர்ப்பக்ரஹம் வரையில் எல்லா ஜாதியினரும் சென்று தரிசிக்கும் உரிமை யுண்டு. பழைய காலத்தில் இவ்வசதி சிவாலயங்களிலும் இருந்தது. வடநாட்டுத் தலங்களிலும், கோகர்ணம் ஸ்ரீசைலம் ஆகிய பாடல் பெற்ற தலங்கள் இரண்டிலும் நாமே மூலஸ்தான மூர்த்தியைத் தொட்டு, அபிஷேகம் அலங்காரம் அர்ச்சனை முதலியன செய்யும் உரிமை இன்றைக்கும் உண்டு. இந்த முறை தமிழ் நாட்டுச் சிவாலயங்களில் மீண்டும் வருதல் நலம். இறையருளும் அரசாங்கமும் துணைசெய்க.

14. திருவிழாக்களின் சிறப்பைக் குறைத்து வரவு செலவு திட்டத்தில் மிச்சம் காணவேண்டும் என்று சில அதிகாரிகள் நினைப்பதுண்டு. இது பெரிய தவறு. திருவிழாக்கள் சிறப்பாக நடப்பதால்தான் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரிய விருப்பத்தோடு திரண்டு வருகிறார்கள். மேல்நாட்டினர் திருவிழாக்களால் சமயம் தாழ்ந்த மக்கள் நிலையளவிற்கு இறங்கி வந்து நற்பயன் தருகிறது என்று ஆராய்ந்துள்ளனர். திருஞானசம்பந்தர் திருமயிலையில் நடந்த திருவிழாக்களையே வரிசையாகப் பூம்பாவைத் திருப்பதிகத்தில் ஓதுகின்றார். சமய குரவர் நால்வருக்கும் திருவிழாக்களில் அதிக ஈடுபாடிருந்தது. திருவாரூரில் நடந்த ஆதிரை விழாவின் சிறப்பை அப்பர் ஸ்வாமிகள் "முத்துவிதானம்" எனத் தொடங்கும் பதிகத்தில் விவரிக்கிறார். இதைக் கேட்ட சம்பந்தர் உடனே திருவாரூர் செல்கிறார். பற்பல பதிகங்களில் திருவிழாக்கள் பற்றிய குறிப்புக்கள் தேவாரத்தில் நிரம்பவுள்ளன. வெள்ளி

வாகனங்களின்மேல் இறைவன் வருவது கண்கொள்ளாத காட்சியாகும். மயிலையில் வெள்ளி அதிகாரநந்தி இடபம் விமானம் ஆகிய மூன்று நாட்களில் ஆயிரக்கணக்கானவர்கள் தரிசிக்க வருகின்றனர். காஞ்சிபுரத்தில் வெள்ளி ரதம் மாவடி சேவை பிரசித்தம். வேறு பற்பல தலங்களில் வெள்ளி ரதம் தங்க ரதம் முதலிய விழாக்களும் சிறப்புடையன. திருவிழாக்களின் தத்துவங்களைப்பற்றி ஞானியார் நினைவு மலர்க் கட்டுரைகள் சிலவற்றில் காணலாம். விடையூரும் விமலன், தேரூர்ந்த திரிபுராந்தகன் முதலிய கட்டுரைகள் பார்க்க. "திருவிழாவின் அர்த்தம்" என்று நான் பல ஆண்டுகட்கு முன் எழுதிய கட்டுரையில் திருக்கொடியேற்றம் முதல் கொடியிறக்கம் வரையில் ஐந்தொழில் தத்துவக் குறிப்புக்கள் வருவதைக் காணலாம். கடவுளுக்குமா கலியாணம் என்று அறிவிலிகள் குறை கூறுவர். இதிலுள்ள உண்மைகளைத் திருச்சாழல் எனும் திருவாசகப் பாடல்களிலும், "போகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்" எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளிலும் காண்க. விரித்துரைத்தால் மிகமிகப் பெருகும்.

15. நால்வர் பெருமக்கள் நிகழ்த்திய அற்புதங்களைச் சிலர் நம்புவதில்லை. தன்முனைப்பால் அவர்கள் ஓர் அற்புதமும் செய்யவில்லை. கடவுளை விண்ணப்பிக்கக் கடவுள் அருளே அந்த அற்புதங்களுக்குக் காரணமாயிருந்தது என்று அறிதல் வேண்டும். எலும்பைப் பெண் ஆக்கிய அற்புதம் நிகழ்ந்த தலம் திருமயிலாப்பூர். எலும்பு சேமிக்கப் பெற்ற கலத்தை இறைவன் சந்நிதிக்கு நேராகப் புறவாயிலுக்கு அருகில் வைக்கச் செய்து, பாசுரந்தோறும் இவ்விழாக்களைக் காணாமல் போய் விட்டாயே என்று பூம்பாவையை விளிப்பதாகப் பதிகம் செல்கின்றது. இப்பதிகத்தின் உட்கருத்தைச் சேக்கிழார் பெருமான் மிக அழகாக,

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனின் உலகர்முன் வருகென உரைப்பார்."

பாசுரத்தில் உள்ள வாக்கமுதம் இறையருளால் (இருந்த எலும்புகளோடு) மறைந்த ஆறு தாதுக்களையும் ஒன்று சேர்த்துப் பூம்பாவையாக்கிற்று, அங்கம்பூம்பாவை ஆயிற்று. எல்லாவற்றிலும் பெரிய அற்புதம் சிவநேசச் செட்டியார் வேண்டுகோளுக் கிணங்காது, அங்கம் பூம்பாவையைத் திருமணம் செய்ய மறுத்தமை. பிரமதேவன் சிறுமையும் சம்பந்தர் பெருமையும் வெளிப்படச் சேக்கிழார் கூறுகிறார். அங்கம்பூம்பாவையின் பேரழகைக் கண்ட சம்பந்தர் "கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிரமுகத்தாற் கண்டார்", தனது பாசுரத்தால் எலும்பு பெண்ணுயிற்று என்று ஒரு க்ஷணம் கூட நினைக்கவில்லை. சுந்தரமூர்த்திகளும் "கரைக்கால் முதலை பிள்ளைதரச் சொல்லு காலனையே" என்று இறையருளையே நாடுகிறார். ஏனைய அற்புதங்கள் இவ்வாறே நிகழ்ந்தன. கடவுள் அருளாற்றலில் நம்பிக்கை இல்லாதவர்களே அற்புதங்களை இகழ்வர். எல்லாச் சமயங்களிலும் பற்பல அற்புதங்கள் நிகழ்ந்த வரலாற்றைப் புறப்புறச் சமயங்களின் விரிவான சரித்திரங்களிற் காணலாம். அற்புதங்கள் சைவத்திலும் வைணவத்திலும் நிரம்ப வுண்டு.

16. தலைமையுரை என்று தொடங்கி எங்கெங்கோ சென்றேன். முதலில் நான் சொல்லியபடி இவ்வுரையில் பற்பல வழுக்களும் மாறுபட்ட கருத்துக்களும் இருக்கும்—இவைகளையும் நான் நெடுநேரம் பேசியதையும் பொறுத்தருள வேண்டுகிறேன்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர்அடியா ரெல்லாம்.

தென்னா டுடைய சிவனே போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி.

❋

சிவமயம்

திருமயிலாப்பூரில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

52-ம் ஆண்டு விழாவில்

தமிழ்நாட்டுத் தருமகர்த்தர்கள் சங்கத் தலைவரும்,
சென்னமல்லேசுரர், சென்னகேசவப் பெருமாள்
தேவஸ்தானங்களின் பரம்பரை தர்மகர்த்தரும்,
மணலி முதலியார்கள் அறநிலையங்களின் பரம்பரை தர்மகர்த்தரும்
ஆகிய

உயர்திரு. மணலி.

இராமகிருஷ்ண முதலியார், பி.ஏ., அவர்கள்

27—12—1957-ல் நிகழ்த்திய

சைவ இளைஞர் மாநாட்டுத்

திறப்புரை

பெரியோர்களே ! தாய்மார்களே ! சகோதரர்களே !

இம் மகாநாட்டில் திறப்புரை நிகழ்த்தும்படி ஏற்படுத்திய சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு எனது நன்றி உரித்தாகுக. சைவத்திற்கும், இளைஞர்கட்கும் நெருங்கிய தொடர்புண்டு. தேவாரம் பாடியோர்களுள் திருஞான சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இளைஞர்களே, சாஸ்திரங்களை அருளியவர்களுள் மெய்கண்டாரும் இளைஞரே, கந்தர் கலிவெண்பா, குமரகுருபர சுவாமிகளால் 5-ம் வயதில் அருளப்பெற்றதே. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்குள்

சண்டேசுவரர், கண்ணப்பர் முதலியோரும் இளைஞர்களே. வைஷ்ணவ சமயத்திலும் ஆண்டாள், நம்மாழ்வார் முதலியவர்களும் இளைஞர்களே. வேறு பல சமயங்களிலும் இளைஞர்களுக்குப் பெரிய தொடர்பு காணப்படுகின்றது.

2. மிகப்பழைய காலத்தில் இருந்த நாகரிகச் சின்னங்கள் புதைபொருள் ஆராய்ச்சியில் காணப்படுகின்றன. இலட்சக்கணக்கான வருஷங்களுக்கு முன் குகைகளில் புதைக்கப்பட்ட மனித உருவங்களோடு அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள் உணவுக் கலங்கள், உணவுப் பொருள்கள் முதலியனவும் காணப்படுகின்றன. இதிலிருந்து இறந்தவர்கள் உடம்பு சாகிறதே ஒழிய உயிர் நிலைத்திருக்கிறதென்ற நம்பிக்கையும் அதற்குத் தேவையான பொருள்களும் புதைக்கப்படும் முறையும் காணப்படுகின்றன. அந்தப் புராதன காலத்திலேயே உடல் வேறு, உயிர் வேறு என்ற சமய உணர்ச்சி அரும்புகிறதைக் காணலாம்.

மொஹஞ்சதாரோ, ஹாரப்பா என்ற இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருள்களில் சிவலிங்கம், அம்பிகை, நடராசர், தக்ஷிணாமூர்த்தி முதலிய உருவங்களும், வாஹனங்கள் பற்றிய குறிப்புக்களும், கோயில் குளம் முதலியவற்றின் அறிகுறிகளும் காணக்கிடக்கின்றன. இவைகளெல்லாம் சரித்திர காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்டவை. இதிலிருந்தும் மக்கள் நாகரிகம் முதன்முதல் தோன்றிய இளமைக் காலத்திலேயே கடவுள் உணர்ச்சி இருந்தது என்பதை அறியலாம்.

3. இளமைப் பருவம் தெய்வீக உணர்ச்சி மிக்கது. வயது அதிகமாக ஆக ஆக உலகத்திலுள்ள பொய், சூது, ஏமாற்றம், காமம், கவலை முதலியன மக்கள் வாழ்வில் எல்லாப் புறங்களிலும் சூழ்ந்து தொல்லையை விளைவிக்கின்றன. இளமைப் பருவத்தில் அழுத்தம் திருத்தமான சமய உணர்ச்சியும், சமய ஒழுக்கமும் இருந்தாலன்றி மக்களுக்கு இன்பம் குறைந்து துன்பமே பெருகும் நிலை ஏற்படுகின்றது. ஆகையால் சமய உணர்ச்சியிலும் கடவுள் நம்பிக்கையிலும் அழுத்த

மான பற்று வருவதற்கு இளமையே தக்க பருவம் ஆகும். தாய் தந்தையர்களே மக்களுக்கு இவற்றை ஊட்டுகின்ற குருமார்கள் ஆவர். இதனாலேயே தமிழர் நாகரிகத்தில் தாய் தந்தையர்கட்கு " இருமுது குரவர் " என்ற பெயர் ஏற்பட்டது. கடவுள் உருவங்களுக்குள் மிக வசீகரமானதும் இளமை தவழ்வதும் சைவத்தில் முருகன், வைணவத்தில் கிருஷ்ணன் உருவங்களே. இவர்களைப் பற்றி விரிவாக இயற்றப்பட்ட நூல்களுக்கே பிள்ளைத்தமிழ் என்ற பெயரும் சூட்டப்பட்டது. பிள்ளைத்தமிழ் நூல்களைப் பயிலும் போதும், பாடல்களைப் பாடும்போதும் குழந்தைக் கடவுளின் உருவம் நமது கண்முன் தாண்டவம் புரிகின்றது. மேல் நாட்டு அறிஞர்களும் குழந்தைக் கடவுளையே பாராட்டுகின்றனர். உருவ வழிபாடுள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் ஏசு கிறிஸ்துவை குழந்தையாகத் தாங்குகின்ற மேரி அம்மையின் திருவுருவமே வணங்கப்படுகின்றது.

4. இனி இளைஞர்கள் சமயத்துறையில் செய்யவேண்டிய சில பணிகளைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நமது பாரதநாட்டில் பேசுகின்ற எல்லாரும் இந்நாட்டின் எதிர்கால வாழ்க்கை இளைஞர்களிடமே உள்ளது என்று சொல்வதைத் தினசரிப் பத்திரிகைகளில் காணலாம். இதற்காகவே A. C. C., N. C. C. முதலிய அணிவகுப்புகளும், சாரணர் (Scout) படைகளும் உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஏற்பட்டுள்ளன. கல்லூரியில் பயிலும் மாணவர்கட்குக் கிராமங்களின் புனர் உத்தாரண (Rural Reconstruction) வேலையில் ஒருபங்கு தரப்படுகின்றது. National Extension Service, Community Project, Block Development Project முதலியவற்றிலும் இளைஞர்கட்கு முக்யத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதிலிருந்து வெறும் படிப்பு மட்டும் போதாது, சாதாரண மக்களோடு பழகி, நாட்டிற்குத் தொண்டுகள் செய்யும் பயிற்சியும் இருத்தல் நலம் என்பதை நமது அரசாங்கத்தினர் உணர்ந்திருக்கிறார்கள் என்று கூறலாம்.

5. இதைப் போலவே சமயத்திலும் பயிற்சி இருத்தல் வேண்டும். சைவ, வைணவ இளைஞர்கள் சமய உணர்ச்சியையும், நல்லொழுக்கத்தையும் சாதாரண மக்களோடு கலந்து, விளக்கி அவர்கள் அனுபவத்திற்கு வரச்செய்தல் வேண்டும். எவ்வித வேலையையும் தமது நிலைக்குத் தாழ்ந்தது என்று எண்ணுதல் பெரிய தவறு. சிறந்த ஞானியாகிய அப்பர் சுவாமிகள் உழவாரப் படைகொண்டு திருக்கோயில்களைச் சுத்தம் செய்த வரலாற்றை நாம் அறிவோம். மேல் நாட்டினர் Gospel of the spade and the pick-axe என்று இதைப் புகழ்ந்துள்ளனர். நமது சமூகத்தில் திருக்கோயில் விழாக்களில் சாரணர்கள் தொண்டு செய்வதை இன்றும் காணலாம். சமய நூல்களையும், ஒழுக்கமுறைகளையும், நன்குகக் கற்று, பாமர மக்களோடு கலந்து பழகி அவற்றை விளக்கும் முறை மிகச் சிறந்ததாகும். கோயில் வழிபாட்டிலும் அவர்களைப் பழக்குதல் நன்மைதரும். வேறு பற்பல விஷயங்களைப்பற்றிப் பேச விருப்பமுடையவன் ஆயினும் இளைஞர் மாநாட்டுத் தலைவர் இவைகளை மிக அழகாகவும், விரிவாகவும் எடுத்துக் கூறுவார் என்ற முழுநம்பிக்கை எனக்கு உண்டு. இதுவரையில் பொறுமையுடன் கேட்ட உங்கட்கு எனது நன்றி.

*

உ

சிவமயம்

திருமயிலாப்பூரில், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

52-ம் ஆண்டு விழாவில்

சைவ இளைஞர் மாநாட்டில்

திரு. ச. சிவகுமாரன், எம். ஏ.,

[Export Officer, Binny & Co, (Madras) Ltd.,]

அவர்கள் **27-12-1957**-ல் நிகழ்த்திய

தலைமையுரை

செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம். —அநுபூதி

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவிஅல்லேன்
நல்அறத்து ஞானிஅல்லேன் நாயினேன்—சொல்அறத்து
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன். —சந்நிதிமுறை

செல்வன் கழலேத்தும் செல்வர்களே! செல்வியர்களே!
சைவப் பெருமக்களே!

உங்கள் யாவரையும் சிவமயமாகக்கண்டு தொழுகின்றேன். இச்சைவ இளைஞர் பேரவைக்கு என்னையும்

ஒரு பொருளாக்கி "நாய் சிவிகை ஏற்றுவித்த" திருவருளை வழுத்துகின்றேன்.

அன்றும் இன்றும்

சைவ இளைஞர் மாநாடு முதன் முதலாகத் திருவிடைமருதூரில் 1930–ம் ஆண்டு திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதற்குச் சற்று முன்பாக 1929–ல் திருநெல்வேலியிலும் திருப்பாதிரிப்புலியூரிலும் விசேஷ மகாநாடுகள் நடைபெற்றன. அது சுயமரியாதை இயக்கம் முறுகி வளர்ந்து கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்த காலம். அந்தச் சூழலில், சைவ சமயப் பாதுகாப்புக்காகவும் சைவ சமய வளர்ச்சிக்காகவும் சைவ உலகத்திற்கே ஒரு திட்டவட்டமான அறிக்கை (Charter) விடுத்தது ; விவரம் சமாஜப் பொன்விழா மலரின் இறுதியில் காண்க. அன்று இருந்தே அதே சூழ்நிலை இன்றும் மாறுமல் அவ்வாறே இருந்து வருகிறது. இன்னமும் சொன்னுல் சைவ இளைஞர்களிடையே சமயப் பற்று நாளுக்கு நாள் நலிந்து வருகிறது.

அன்று நிறைவேற்றிய தீர்மானங்களை இன்று திரும்பவும் நிறைவேற்றினுலும் அவை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுவனவாகவே இருக்கின்றன. இந்த மந்த நிலைக்குக் காரணமென்னை? சைவ இளைஞர்களின் ஊக்கமின்மையேயாம். அன்றைய சுயமரியாதை இயக்கம் கடவுளில்லை என்று கூறிற்று; இன்றைய திராவிட-திராவிட முன்னேற்றக் கழகங்கள் கடவுள் இருக்கலாம். ஆனுல் சமயம் தேவையில்லை, சமயச் சின்னங்கள் அவசியமில்லை, சமய ஸ்தாபனங்கள் வீண் செலவு என்கின்றன ; பெருவாரியான மக்களின் போக்கும் இம்முறையில் செல்கிறது. இன்னும் சில புறச் சமயத்தாரின் ஆதிக்கம் வலுத்துக்கொண்டு வருகிறது. அவர்களுக்கு வண்டி வண்டியாகப் பணம் வெளிநாட்டிலிருந்தும் வருகிறது. அரசியல் வாக்குரிமையை வெளிநாட்டிலிருக்கும் தம் சமயத் தலைவரின் ஆணைப்படியே இச் சமயிகள் செலுத்துவார்கள் ! இவ்வாறு இந்து சமயம் இந்துக்களுக்குள்ளிருந்து எழும்

தாக்குதல், புறச் சமயிகளின் தாக்குதல், இரண்டையும் சமாளிக்கவேண்டி யிருக்கிறது. எதிர்கால அரசியல் அமைப்பில் தமிழ் நாட்டின் திருக்கோயில்களும் சமய ஸ்தாபனங்களும் பெரிதும் பாதிக்கப்படலாம். இந்த நிலை ஏற்படா திருக்கவும், சைவ சமயம் ராஜாங்கத்தமர்ந்திருக்கவும், சைவ இளைஞர்கள் மற்றக் கட்சியினர், மதத்தினரோடு பிணங்காமல், தாமே சைவ நெறி நின்று வாழ்ந்து காட்டுதல் தவிர வேறு உய்யும் வழி எதுவும் இல்லை. என்னுடைய சிற்றுரை, சைவத்தின் தொன்மை, சைவத்தின் மாண்பு, சைவ சித்தாந்த சாத்திரம் முதலான துறைகளில் அமையாமல் இனிச் சைவ இளைஞர் செய்ய வேண்டுவன யாவை என்பது பற்றியே இருத்தலைப் பெருமக்கள் பொருத்தமெனக் கொண்டருள்க.

சைவ நெறி

"அருளிலார்க்கு அவ்வுலகமில்லை" என்றருளினார் தெய்வப் புலவர். எனவே, அவ்வுலகத்திற்குச் செல்லும் தகுதி அருள். அத்தகுதியை இவ்வுலகத்திலேயே பெற்றாக வேண்டும். இறை நெறி நின்று இல்லறமும் நடாத்தி அருள் பெறும் வகையை நாம் அருள் நெறி என்னலாம். நாம் நம் விருப்பம்போல் பிறவி ஏற்பதில்லை. அந்த சுயேச்சை நமக்கு இருக்குமேயானால் நாம் எந்த சமயத்தைச் சார்ந்த குடும்பத்தில் பிறப்பது என்று முடிவு செய்து, பொன்னார் மேனியராக செல்வக் குடும்பத்தில் பிறப்போம். பிறவா யாக்கைப் பெரியோன், தன் திருவுள்ளப்படி நம்மைப் பிறப்பிக்கிறான்; நல்ல ஊழ் இருக்க நாம் சைவ சமயத்தில் பிறந்தோம். இதனாற்றான் சிவஞானசித்தியாரும் "சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது" என்கிறது. தெய்வச்சேக்கிழாரும் சாக்கிய நாயனார் வரலாற்றில் "செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்...இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை" என்றருளியுள்ளார். இதனால் நாம் சைவ சமயத்தில் பிறந்தது பற்றிப் பெருமைகொள்வது மட்டுமன்றி அதற்கேற்ப நம் கடமைகளையும் உணர்ந்து அதன்படி வாழவும் வேண்டும்.

இப்படி வாழ்வாங்கு வாழவேண்டிய அருள் நெறிக்குச் சைவ நெறி என்ற சிறப்புப் பெயர் பொருந்தும்.

இல்லறத்தில் சமய வாழ்வு

இல்லறமல்லது நல்லறமின்று. இயற்கையாகவே துறவு மனப்பான்மை இருந்தாலன்றி, இல்லறமே மேற்கொள்ளு கிறோம். இதனாற்றான் சிதம்பர சுவாமிகளும் "இயற்கைத் துறவியல்லேன்" என்கிறார். இல்லறத்தை ஒத்த சமய உணர்ச்சி உடைய தம்பதிகளாக அமைந்து நடாத்துதல் சிறந்தது ; இருவருக்குள் சமய நெறி சமய முறையில் ஒரு வேளை சமநிலை இல்லாவிட்டாலும் தத்தம் நெறி நின்று ஒழுகுதல் வேண்டற்பாலது. மதுரைமா நகரையாண்ட கூன் பாண்டியன் சமணும் மங்கையர்க்கரசியாரின் சைவ நல்வாழ் வும் இருவரிடையே இருந்துவந்த இன்ப அன்பும் இங்கு நினைவுகூர்தற்பாலன. குழந்தைகட்கு, பக்தியூட்டும் இறை வன் இறைவி திருநாமங்களைச் சூட்டி, அவர்களைப் பிள்ளைத் தமிழ் முதலான பக்திப் பாடல்களால் தாலாட்டி, பின்னர் ஆழ்வார்கள் நாயன்மார்கள் கதைகள்கூறி, சிறுசிறு சொற்க ளாகப் பிரித்துத் தேவாரம், திருப்புகழ் முதலிய பாடல்களைச் சொல்லித்தந்து, "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்" என்று சொல் லத்தக்க முறையில் நம் குழந்தைகளை நாம் வளர்க்க வேண்டும். வாரத்திற் கொருமுறையேனும் குடும்பத்தோடு கோயிலுக்குச் சென்று அங்கு நடைபெறக்கூடிய வாரவழி பாட்டிலும் கலந்துகொள்வது நலம். உல்லாசப் பிரயாணம் செய்வதுபோல், ஆண்டிற் கொருமுறையேனும் அதற்கெனப் பொருள் சேமித்து வைத்துப் பாடல்பெற்ற கோயில்கள் எல்லாவற்றையும் அவசியம் மனைவியுடனும் கூடுமானால் குழந்தைகளுடனும் சென்று தரிசிக்கவேண்டும். அன் றாடம் பிள்ளையார் பூசை நடராஜர் பூசை, சிவலிங்க பூசை அவரவர் விருப்பம் வசதிக்கேற்ப செய்வதோடு, இவற்றில் விசேஷ நாட்களிலாவது பூசையில் குழந்தைகளை யும் கலந்துகொள்ளுமாறு செய்வது நல்லது. பூசையின்

முக்கிய அங்கமாகத் தினமும் பன்னிரு திருமுறைகள், திருப்புகழ், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா இவைகளைப் பாராயணம் செய்யவேண்டும். இரவில் படுக்கப் போகுமுன் கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கம்பராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்களையும் பொருள் தெரிந்து தெளிவாகப் படித்துவந்தால் பக்திப் பயிர் விளைவதோடு பழுத்த தமிழ்ப் புலமையும் பாலிக்கும். இதனால் நம் எண்ணங்கள் உயர்வதோடு, நம் சொல்லும் எழுத்தும் வளம் பெறும் ; அவற்றில் தெய்வ மணம் வீசும்.

சமுதாயத்துறையில் சமய வாழ்வு

வாரவழிபாடு, பகவத் நாமபஜனை இவற்றில் உள்ளங் குளிரக் கலந்துகொண்டு சகோதர மனப்பான்மையையும் வளர்த்துக்கொள்ளுதல் அவசியம்.

சிறைச்சாலையில் உள்ளவர்களை வாரத்திற் கொருமுறையோ இருவாரத்திற் கொருமுறையோ கண்டு அவர்களுக்கு எளிய முறையில் சமய போதனை செய்யலாம். மருத்துவ நிலையங்களில் உள்ள நோயாளிகளைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல் தேறுதல் கூறி, திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, சஷ்டி கவசம், சண்முக கவசம் போன்ற அநுபூதி நூல்களை, கையடக்கப் பதிப்புக்களாக இலவசமாக வழங்கி, திருச்செந்தூர், பழநி, வைத்தீஸ்வரன் கோயில் விபூதிப் பிரசாதங்களை நோயாளிகளுக்குத் தரலாம். நால்வர் விழா, மெய்கண்டார் திருநாள், சேக்கிழார் திருநாள், திருவள்ளுவர் விழா, இவற்றைச் சிறப்பாகக் கொண்டாடலாம். விநாயக சதுர்த்தி கந்தசஷ்டி கார்த்திகை தீபம், சிவராத்திரி, பொங்கல் ஆகிய பண்டிகைகளையும் சைவர்களின் முக்கிய சமுதாய விழாவாகக் கொண்டாடுதல் வேண்டும். வீடுகளில் நிகழும் திருமணம் சீமந்தம் முதலான விழாக்கள் விசேஷங்களில் அவ்வவற்றின் இயல்பிற்கேற்ப அமைந்துள்ள திருமுறைப் பாக்களைத் தொகுத்து, ஓதுவார்களைக்கொண்டு பண்முறையில் பாராயணம் செய்வதோடு,

அச் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட பாக்களையும் கைப் புத்தகமாக அச்சிட்டு வழங்கலாம்.

தேவாலயத் திருப்பணி

தேவாலயங்கள் நமக்கு நம் முன்னோர்கள் அளித்துச் சென்ற அறப்பெருஞ் செல்வங்களாகும். கோயில் வழிபாட்டின் முறையையும் மூர்த்தி தலம் தீர்த்தம் இவற்றின் உட்பொருளையும் பயனையும் இவற்றின் அடிப்படைத் தத்துவங்களையும் நம் இளைஞர்கள் நன்கறிதல்வேண்டும். வாரத்திற்கொருமுறையேனும் தவிராது கோவிலுக்குச் செல்லுவோமேயானால் அங்குள்ள அர்ச்சகர் முதலியவர்களுக்கும் உற்சாகமும் ஊக்கமும் உண்டாகும். விடுமுறை நாட்களில், சைவ இளைஞர்கள் குழுவாகக் குறிப்பிட்ட கோயில்களுக்கு முன்னேற்பாட்டுடன் சென்று அங்கு பிராகாரத்தில் புல் செதுக்குதல், மதிற்சுவர் கோபுரம் இவற்றின்மீது முளைத்திருக்கும் செடிகளைச் சாக்கிரதையாக ஏறி அப்புறப் படுத்துதல், கோயில் நந்தவனத்தில் பூச் செடிகள் வைத்தல், முன்னமேயே வைத்த செடிகளுக்குத் தண்ணீர் வார்த்தல் முதலிய திருப்பணிகள் மூலம் முன்னோர் அளித்துச் சென்ற கோயில்களை மேலும் பழுதாகாமல் பாதுகாத்து வருவோமானால் அதுவே புதுவதாகத் திருக்கோயில்கள் கட்டுவதைக் காட்டிலும் சிறந்த தொண்டாகும்.

மடாலயங்களோடு தொடர்பு

இப்போது அருளாட்சி செய்துவரும் முப்பெரு மகா சந்நிதானங்களும் திருநெறிய தெய்வத் தமிழ் வளர்ச்சிக்காகவும் சைவசித்தாந்தப் பயிற்சிக்காகவும் புரிந்துவரும் அரும் பெரும் பணிகள் அளவிறந்தன. தருமபுர ஆதீன மகாசந்நிதானமவர்கள் சென்னையில் பெருஞ் செலவில் சமயப் பிரசார நிலையம் அமைத்து கடந்த நான்கு ஆண்டுகளாகச் செய்து வரும் பெருந் தொண்டுகள் யாவரும் அறிந்ததே. திருப்பனந்தாள் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தமிழ்நாடு மட்டு

மல்ல வடநாட்டு வாரணசி முதலான பகுதிகளிலும் சைவ சமயப் பிரச்சாரத்திற்குச் செய்திருக்கும் நிரந்தர ஏற்பாடுகள் போற்றற்குரியன. திருவாவடுதுறை மகாசன்னிதானம் அவர்களும் அருள்நெறி பொருளாதாரம் இரண்டையும் பரிபாலித்து, திருமூலர் திருமந்திர மகாநாடுகள் சைவ சித்தாந்த மாநாடுகள் சைவ நூல் வெளியீடுகள் முதலான முறைகளில் செய்துவரும் சேவைகள் மகத்தானவை. காலப் போக்கினை அறிந்து மேற்கூறியவாறெல்லாம் தமிழ் சைவத் தொண்டு புரிந்துவரும் சைவ சமய நெறியின் அறப்பெருங்காப்பாளர்களாகிய இம் முப்பெரு ஆதீனங்களை நாம் பக்தி விசுவாசத்தோடு போற்றவேண்டும். சைவ இளைஞர்கள் இவ்வாதீனங்களோடு தொடர்புகொண்டு ஆதீனகர்த்தர்களின் சமயப்பணிகளுக்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும். செல்வாக்குள்ள சைவப் பெருமக்கள் ஆதீனங்களின் பிரமுகர்களாக இருந்து சட்டசபை முதலான அரசியல் ஸ்தாபனங்களில் ஆதீனங்களைப் பாதிக்கக்கூடிய சட்டங்களோ திருத்தங்களோ நுழையாமல் விழிப்பாக இருந்து, அவசியம் நேர்ந்தால் சட்டசபையினருக்கு, ஆணித்தரமாக சைவ சமய ஸ்தாபனங்களில் அவர்கள் தலையிடுதல் கூடாது என்றும் இடித்துரைக்க வேண்டும்.

கல்லூரிகளில் சைவம்

சமயச் சார்பற்ற அரசியலில் வாழ்கிறோம். கல்லூரிகளில் சமய போதனைக்கு இடமில்லை. ஆயினும் கிறிஸ்தவர்கள் தம் கல்லூரிகளில் விவிலிய நூலைப் போதிக்கிறார்கள். கிறித்தவப் பாதிரிமார்கள் கிறிஸ்தவ மாணவர் சங்கங்கள் நிறுவி, அவர்களை அடிக்கடி சபைகூட்டிச் சந்தித்துத் தம் சமயப் பாதுகாப்பு முறைகளையும் பிரசாரப் பணிகளையும் எடுத்துரைத்து அம் மாணவர்களை அவற்றில் ஈடுபடுத்துகிறார்கள். கல்லூரியில் பயிலும் நம் சைவ இளைஞர்களுக்கு ஒன்று சேர்ந்து பழகிப் பணிபுரிய அத்தகைய வாய்ப்பளிக்க இதுவரை ஒரு முயற்சியும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கல்லூரி மாணவர்களுள் தமிழ் மன்றம் என ஒரு சங்கம் நிறுவப்பட்டுச் சில

காலமாக நிலவி வருகிறது. அவ்வாறே சைவ சமயப் பற்றுடைய கல்லூரி மாணவர்களை ஒருங்கு திரட்டி ஆக்க வேலையில் ஈடுபடுத்த ஒரு சங்கம் மிகவும் இன்றியமையாதது. இப் பணியை முதலில் சென்னையில் தொடங்கிப் பின்னர் திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும் ஏற்படுத்துதல் வேண்டும்.

கல்லூரிகளில் சீர்திருத்தக் கொள்கை

முகம்மதியர்களும் கிறிஸ்தவப் பாதிரிமார்களும் நம் சமயத்தில் உருவ வழிபாடு, மூர்த்தி வழிபாடு முதலியவற்றைத் தாக்கிப் பேசினார்கள். வெள்ளையர் நாகரிகத்தில் ஆதிக்கத்தில் நம்மவர்களுக்குச் சரியான முறையில் நம் சமயக் கோட்பாடுகளை எடுத்துரைக்க வசதியில்லை. பரம்பொருள் உண்டு என்பதை மட்டும் ஒத்துக்கொண்டு உருவ வழிபாடு தேவையில்லையென்றும் மூர்த்தி தலம் தீர்த்தம் பொருளற்றவையென்றும் கூறி, பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம் தோன்றின. பின்னர் இராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் தோன்றி உருவ வழிபாடு, இந்து தர்மம் இவற்றின் பெருமைகளை மீட்டாரேனும் சென்ற நூற்றாண்டிலிருந்தே சீர்திருத்தக் கொள்கைகள் இளைஞர்கள் உள்ளத்தில் வேறூன்றி விட்டன.

இறைவனைப் புலவர்கள் நிந்தாஸ்துதியாகப் பாடியதன் நையாண்டி மனப்பான்மை, நாடகக்காரர்கள் வள்ளித் திருமணம் போன்ற நாடகங்களில் கடவுளைக் கேவலமாக மனிதனைப்போல் நடித்துக் காட்டுதல், சைவ வைணவச் சண்டை, வடகலைத் தென்கலைச் சண்டை முதலியன மக்கள் மனத்தில் இந்து சமயத்தில் வெறுப்பையும் அவமதிப்பையும் வளர்த்துவிட்டன. இத்தலைமுறையில் நம்மையெல்லாம் வியக்கச் செய்யும் வகையில் விஞ்ஞானம் வளர்ச்சியுற்றதன் பயனாக முன்பு வெறும் கற்பனை என்று தள்ளிவிட்டதையெல்லாம் இன்று நடந்திருக்கக் கூடும் என்று சிந்திக்க ஆரம்பித்திருக்கிறோம். நம்முடைய சிற்றறிவிற்கு எட்டவில்லை, நம்

முடைய அற்ப அனுபவத்தில் காணவில்லை என்ற காரணத்தி லேயே பழையனவற்றைப் பொய்யெனவோ அறிவுக்குப் பொருத்த மற்றவையென்றோ தள்ளிவிடுவதற்கில்லை என்ற அளவிற்கு நமக்கு இப்போது புத்தி வந்திருக்கிறது.

சைவ சித்தாந்தப் பயிற்சி

தற்போதுள்ள நம் உலகியல் நிலையில், சைவ இளைஞர் கள் சைவ சித்தாந்த சாத்திரத்தைப் படிக்க முற்படுவார்களா னால் அதில் விளக்கப்பட்டிருக்கும் வியக்கத்தக்க பதி பசு பாச உண்மைகளைத் தெரிந்து கொள்வதோடு சைவ சமயத்தினிடத் தும் பற்றும் நம்பிக்கையும் கொள்வார்கள். கல்லூரி மாண வர்களைக் கோடை விடுமுறை முதலான நாட்களில் மதுரை, தருமபுரம், திருச்சி, சென்னை, கோவை ஆகிய ஊர்களில் சிறு சிறு தொகுதிகளாகக் கூட்டி, காஞ்சிபுரம் சைவத் திரு. க. வஜ்ரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி. போன்ற சைவ சித்தாந்தப் பேரறிஞர்களைக்கொண்டு சைவ சித்தாந்தம் போதித்தல் மிகவும் இன்றியமையாதது. பல்கலைக் கழகத்துப் பாடதிட்டத்தில் மறுபடியும் சைவ சித்தாந்த சாத்திரப் பகுதியை எம். ஏ. பரிட்சைத் திட்டத்தில் சேர்த்து, மாண வர்கள் அப்பாடப் பகுதியில் சேர்ந்து படிக்கும்படி ஊக்கு விக்கவேண்டும். அவ்வாறு எம். ஏ. படிப்பில் சைவ சித்தாந் தம் படிக்க முன் வருவோரது கல்லூரிச் சம்பளம் புத்தகச் செலவு இவற்றை முப்பெரு ஆதீனங்கள் அன்புகூர்ந்து ஏற்றுக் கொண்டால்கூட நல்லது. இவ்வாறெல்லாம் சைவ சித்தாந்த சாஸ்திரப் பயிற்சியை நாம் பாதுகாக்காவிட்டால், எதையும் ஆழ்ந்து கஷ்டப்பட்டுப் படிப்பதில்லை யென்கிற மனப்பான்மையில் பெரும்பாலான மாணவர்கள் இருந்து வருகிற இக் காலத்தில், சைவ சித்தாந்த சாஸ்திரமே இன்னும் கொஞ்ச காலத்தில் படிப்பாரற்றுப் போய்விடும்.

இளமையும் அழகும்

பன்னிரு திருமுறை பதினன்கு சாஸ்திரங்களை அடிப் படையாகவும், மேலும் திருப்புகழ் தாயுமானர் பட்டினத்

தார் பாம்பனடிகள் போன்றவர் அநுபூதி நூல்களையும் படிப்பதன் பயனுக நம்முடைய இவ்வுலக வாழ்வு இன்ப அன்பினதாக இருக்கும்; அருள் பெருகும். சித்தம் அழகியதாகும்; சித்தம் அழகியார் நம் சிவனைப் பாடுவர். அகத்துறை அழகனுல் நம் இல்லற வாழ்வு இறைகளோ டிசைந்த இன்பம்- இன்பத்தோ டிசைந்த வாழ்வாக அமையும். அப்பொழுது தான் சைவ இளைஞர் சமுதாயத்தில், கம்பர்பெருமான் கூறிய "பொறற்பின் நின்றன பொலிவு" என்ற நிலையும் "அன்பின் நின்றன அறங்கள்" என்ற பெருமையும் உண்டாகும். இந்த இன்ப வாழ்வு அழகிய வாழ்வு நம் கண் வழி காணப்படும்.

உள்ளம் அழகியதானுல் பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிற்பதும் அழகுக் காட்சிகளேயாம். கண் நல்லதே காணும். இல்லறத்தில் வாழும் இளைஞர்கள் சிறப்பாக இக் கருத்தினை, மிக இளைஞராகிய சிவஞானக்கன்றும் திருஞான சம்பந்தர் எவ்வாறு இயம்புகிருர் என்று உன்னுதல் வேண்டும். அதை நினைவு கூர்ந்தே எளியேன் சிற்றுரை அமைவதாகுக.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணி நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

*

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

52-வது ஆண்டு நிறைவு விழா - திருமயிலை.

மங்கையர் மகாநாட்டுத்

திறப்புரை

திறந்துவைப்பவர்: **ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் அம்மையார் அவர்கள்**

அன்பார்ந்த பெரியோர்களே ! சகோதரிகளே !

சைவ மங்கையர் மகாநாட்டைத் திறந்து வைக்கும் பணியை எனக்குத் தந்தமைக்கு நன்றி. உமாதேவியார் மயிலுருவாய் வந்து ஸ்ரீ கபாலீசுவரரைப் பூஜித்த இத் திருமயிலையில் சைவ மங்கையர்கள் பணியாற்ற ஒரு மகா நாடு அவர்களுக்கெனச் சிறப்பாகக் கூடுவது இன்றியமை யாததே யாகும். வாசுகி அம்மையாரை வாழ்க்கைத்துணை நலமாகக் கொண்டு வாழ்ந்த திருவள்ளுவர் அவதரித்த இத் திருமயிலையில் தமிழ்ப் பெண்மணிகள் பன்னெடுங்கால மாகப் போற்றி வந்துள்ள நல்லொழுக்கத்தையும் பண்பாட் டையும் நினைப்பூட்டிக் கொண்டு, தம் குடும்பத்திற்கும் குலத் திற்கும் பொன்றாத புகழினைத் தருதலில் ஊக்கங்கொண்டு சிறந்த பணியாற்ற முற்படுதற்கு இது ஒரு நல்ல வாய்ப் பாகும். சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் ஒன்றுக் கொன்று ஆதாரமாய் இருக்கின்றன. சமூகத் தொண்டின் திட்பம், சமய ஒழுக்கங்களின் மேன்மையைப் பொருத் திருக்கின்றது என்னலாம். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற திருவள்ளுவர் திருவாக்கு பலர்க்கும் நினைவிருக்கும்.

ஒழுக்கத்திற்கு அடிப்படை மனச்சான்றுதான் என்று சிலர் கருதுவார்கள். ஆனால் மனச்சான்று என்பது அநேக

மாய்த் தேச கால வர்த்தமானங்களை யொட்டி நிற்பது. எனவே அது காலத்திற் கேற்பவும், சூழ்நிலைக் கேற்பவும் மாறுபடுதல் இயல்பாகும். உதாரணமாக, வாணிபம் செய்வோருடைய மனசாட்சிக்கும் உத்தியோகம்செய்து ஊதியம் பெறுபவர்களுடைய மனசாட்சிக்கும் வேறுபாடுண்டு. எனவே, ஒழுக்கம் மனச்சாட்சியைப் பொருத்தமட்டி லிருப்பின் அது நல்லொழுக்கமாகவே அமைவது அரிது. சமய சாத்திரங்களில் அநுபூதிமான்கள் கூறியுள்ள ஒழுக்க நெறியே சால்புடையதாகும். அந்த முறையில் சமய உணர்ச்சி கொண்டு சமூக சேவை செய்வது சமயமும் சமூகமும் ஒருங்கு வளர்ச்சி யடைதற்குச் சிறந்த சாதனமாகும். சமூகத் தொண்டிற் செலுத்தாத சமய உணர்ச்சியாற் பயனில்லையென்றே கூறலாம். சைவ சமய பரமாசாரியர்கள் இதையுணர்த்த அவதரித்தவர்களென்றும் கூறலாம். அப்பரும் சம்பந்தரும் ஆண்டவனிடம் பொற்காசு பெற்று மக்களுடைய பஞ்ச அவலத்தை மாற்றினார்கள் என்று காண்கிறோம். அப்பர் சுவாமிகள் தம்முடைய உழவாரப்படை கொண்டு மக்கள் நடக்கும் பாதைகளிலுள்ள கல்லையும் முள்ளையும் அகற்றிப் பணியாற்றினார்கள். பல அடியார்கள் அன்னமளித்தும், ஆடை அளித்தும் பிற அறம் பல செய்தும் வாழ்ந்தார்களென்று திருத்தொண்டர் புராணத்தில் காண்கிறோம் :

"தொண்டலால் துணையுமில்லை, தோலலால் உடையுமில்லை"

"பிச்சைய தேற்றான் பிரியாதறஞ் செய்ய"

என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார்கள்.

அப்படிப்பட்ட தொண்டாற்றுதற்கு அடிப்படையாக வேண்டும் பண்பு அன்பாகும். "அன்பே சிவம்" எனக் கொள்வது சைவ சமயம். நாம் நம் குழந்தைகளிடம் அன்பாயிருக்கிறோம் என்றால் அவர்களுக்கு ஆவன செய்து தாராவிடில் நம் அன்பு உள்ளன்பல்ல என்றே கூறவேண்டும். நடமாடுங் கோயிலுக்காற்றும் பணி படமாடும் பரமற்கு ஆகும் என்று ஆன்றோர் கூறியிருத்தல் பணியின் பெருமையை உணர்த்துகிறது.

சைவ நெறி இப்படிப்பட்ட பேருண்மைகளை உணர்த்த வல்லது. சிவனடியவர்கள் செயற்கரிய தொண்டுகளைப் புரிந்து வாழ்ந்தார்கள் என்று கூறிச் சமயத்தின் பெருமையையும், சைவ அடியார்களின் பெருமையையும் நினைப்பூட்டிக் கொள்வது வெறும் மகிழ்ச்சிக்கல்ல. அந்த நினைவு தொண்டில் நமக்கு ஊக்கம் தருதல் வேண்டும். மக்கள் பணியிலும் ஆண்டவன் பணியிலும் அந்நினைவு நம்மை ஈடுபடுத்தல் வேண்டும்.

அன்னிய நாட்டுச் சமயங்களின் வளர்ச்சிக்குக் காரணர் அச் சமயங்களின் தொண்டர்களேயாவர். அவர்கள், மக்கள் வறுமையால் பீடிக்கப்பட்டு வாழும் சேரிகளுக்குச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தல், பிணியால் வருந்திக்கொண்டு மக்களிருக்கும் மருத்துவ நிலையங்களுக்குச் சென்று அவர்களிடம் அன்பு காட்டுதல், அறியாமையால் மக்கள் கொண்டுள்ள கெட்ட பழக்க வழக்கங்களை மாற்ற அறிவு புகட்டல், தொழுகைக்குரிய இடங்களில் மக்களுக்கு நல்லுபதேசங்களைச் செய்தல் முதலிய பணிகள் புரிவதால் அச் சமயங்கள் மேலோங்கி வளர்ச்சியடைந்து வருகின்றன. நம் கோயில்களில், பாதிரியார் ஸ்தானத்திலுள்ள குருக்கள்மார்கள் மக்களுக்கு நல்லுபதேசம் கூறுதலை நாம் காணவில்லை. பிற அறிஞர்களைக்கொண்டு சமயப் பிரசங்கங்களை நடத்தினால், அப்படிப்பட்டவர்களிடம், கோயில் வழிபாட்டுரிமையில்லாமையால், அவர்களுடைய பேச்சுக்குப் போதிய மதிப்பில்லாமல் போகிறது. மக்கள் யாரிடத்து அதிக மரியாதை காட்டுகிறார்களோ அவர்கள் சொல்லும் உபதேச மொழிகளைத்தான் ஏற்பார்கள். அதேபோல், கல்வியறிவு பண்பாடில்லாதவர்கள் கோயிலில் பூஜை செய்தால் அதையும் மக்கள் மதிப்பதில்லை. இந்த முரண்பாட்டு முறையால் நம் கோயில்களின் மதிப்பு குறைந்து வருகிறது.

இந்த நிலையில் வைதிகரென்றும், அறிஞர்களென்றும் பிரிவினை ஏற்பட்டு, சமயங்களில் பிணக்குகள் உண்டாகின்றன. ஒழுக்கச் சிறப்புள்ளவர்களைக் கொண்டு கோயில்களில் மக்களுக்கு நாள்தோறும் நல் உபதேசமொழிகள் கூறப்பட

வேண்டும். நம் பரமாசாரியர்களைப் போன்று, சிறந்த அறிஞர்கள் தாமே கோயில்களுக்குச் சென்று சொற்பொழி வாற்றும் பணியை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவர்கள் தாமாகவே முன்வந்து தக்க சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற குறிக்கோளினால் தூண்டப்பெற்றவர்களாய்ப் பயனுள்ள உபந்நியாசங்களை உள்ளன்புடன் நிகழ்த்தவேண்டும். அப்படி முன்வரும் பணியாளர்களுக்குக் கோயிலதிகாரிகள் இட முதலிய வசதிகள் செய்துதருதல் வேண்டும்.

சைவ சமயத்தை வளர்த்து வந்த வகையில் முன்னாளில் பெண்மணிகட்கும் பெரும்பங்கு இருந்துவந்தது. திருநாவுக்கரசரை நமக்கு அளித்தவர் அவருடைய தமக்கையாரன்றோ! திருஞானசம்பந்த சுவாமிகளை நினைத்தமாத்திரத்தில் பால் சுரக்கும் அன்புபடைத்த பாண்டிமாதேவியார்—மங்கையர்க்கரசியார்—முயற்சியாலன்றோ மங்கிக்கிடந்த சைவஒளி மாண்புற ஓங்கிற்று! அக்காலத்திருந்த கொடிய பல இடர்ப்பாடுகளுக்கிடையே அவர்கள் இச்சமயத்தைத் தாழாது காத்து நிலைநிறுத்தியதின் பயனைப்பற்றி நாம் இன்று பெருமையுடன் பேசுகிறோமேயொழிய, அவர்கள் பாடுபட்டதுபோல் நாம் பாடுபட முன்வருவதில்லை. அதற்கு அஞ்சுகிறோம். அவ்வச்சத்தை நீக்கி ஆர்வமுடன் வந்து பணிசெய்யச் சைவ மங்கையர்கள் முற்படவேண்டுமென்ற பெருவிருப்புடன் இச் சைவ மங்கையர் மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன். இதற்கெல்லாம் இறைவனருள் புரியவேண்டும் என்ற பிரார்த்தனையைச் செய்துகொண்டு அடியவர்கள் யாவருக்கும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*

வரவேற்புரை*

மெய்யன்பர்களே,

இம் மகாநாட்டைத் திறந்து வைக்க அன்புடன் இசைந்துள்ள கனம் மந்திரி உயர்திரு. பக்தவத்சல முதலியார் அவர்கட்கும், சமாஜ மகாநாட்டுத் தலைவர் திரு. ம. பால சுப்பிரமணிய முதலியார் அவர்கட்கும், இளைஞர் மாநாட்டுத் திறப்பாளர் திரு. மணலி. இராமகிருஷ்ண முதலியார் அவர்கட்கும், இளைஞர் மகாநாட்டுத் தலைவர் திரு. ச. சிவகுமாரன் அவர்கட்கும், மங்கையர் மாநாட்டுத் திறப்பாளர் ஸ்ரீமதி. சரோஜினி வரதப்பன் அம்மையார் அவர்கட்கும், மாதர் மகா நாட்டுத் தலைவி திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கட்கும், சொற்பொழிவாற்ற இசைந்துள்ள அறிஞர்களுக்கும், சமாஜ அங்கத்தினர் அனைவர்களுக்கும், கூடியுள்ள சிவநேயச் செல்வர்கள் யாவருக்கும் எங்கள் அன்பு கலந்த வரவேற்பை அளிக்கின்றோம்.

இம் மகாநாடு கூடும் மயிலாப்பூர் சான்றோர் உடைத்தென்று சொல்லப்படும் தொண்டை நாட்டிற்குத் திலகம் போல் விளங்குகின்றது. தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையம்பதியின் ஒரு பகுதியாய் இருப்பதுமல்லாமல், சைவ சமய ஆசாரியர்களில் ஒருவரான நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய திருஞான சம்பந்தப் பெருமான் தேவாரப் பதிகம் பாடி எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதம் நிகழ்த்திய பெருமை வாய்ந்தது. உமாதேவியார் மயிலுருவம் கொண்டு இறைவனைப் பூசித்த புகழ் வாழ்ந்தது. இத்தகைய பெருமைகள் பெற்ற திருமயிலாப்பூரில் சமாஜ விழா நடத்துவது மிகப் பொருத்தமானது.

நமது சைவ சித்தாந்த மகா சமாஜம் 52 ஆண்டுகளாகச் சைவ சமய வளர்ச்சிக்குப் பல பணிகள் ஆற்றியுள்ளது. அதில் முக்கியமானது சைவத் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் முதலிய சமய நூல்களைப் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு அடக்க விலைக்கு வெளியிட்டதாகும். இப்பணியில்

---

*27-12-57-ல் மயிலையில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-வது ஆண்டுவிழாவின் வரவேற்புக் கழகத்தார் நிகழ்த்தியது.

மிகவும் ஈடுபட்டு ஒத்துழைத்த பெரியார் காலஞ் சென்ற திரு. வி. உலகநாத முதலியார் ஆவர். அச்சுப் பிழைகள் இல்லாமல் புத்தகங்கள் வெளிவர மிக்க பிரயாசை எடுத்துக் கொண்டது மல்லாமல், அச்சிட்ட புத்தகங்களைத் தன்னிடம் வைத்திருந்து, விற்று, அச்சிட முன் பணம் உதவிய அன்பர் களுக்குத் தொந்தரவில்லாமல் அவர்கள் போட்ட பணத் தைத் தந்து கொண்டிருந்தார். அதனால் அவர் இருந்த வரை யில் அடக்க விலைப் பதிப்புகள் வெளிவர இலகுவாயிருந்தது. சமாஜம் அடக்க விலைப் பதிப்புகளை முன்போல மேலும் வெளியிட வேண்டுமானால் அவரைப் போன்று ஒத்துழைக் கும் தொண்டர்கள் தேவை.

சைவ சமய வளர்ச்சிக்கு நமது சமாஜம் பல திட்டங் களை வகுத்திருக்கிறது. நிறைவேறிய திட்டங்கள் மிகச் சிலவே. சைவ சமய வளர்ச்சிக்குரிய திட்டங்களில் ஒன்று சிறுவர்களுக்கும், முதியோர்களுக்கும் தேவாரம் முதலிய திருமுறைப் பாடல்களை இசையுடன் பொருள் விளங்கும் முறையில் ஓதக் கற்றுக் கொடுத்தல் ஆகும். அப்படிப் பாடம் கற்றுக் கொடுக்கும் முறையில் “ தேவாரத் திரட்டு ” ஒன்று சமாஜத் தலைவரால் வெளியிடப் பட்டுள்ளது. சென்னை இராயபுரம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் 4 மாதங்களாக இந்த முறையில் தேவார வகுப்பு நடந்துகொண்டு வருகிறது. அதிபத்த நாயனார் மரபினர் பலர் ஊக்கத்துடன் கற்றுப் பய னடைகின்றனர். சென்னையில் பல இடங்களில் இம் முறை யில் தேவார வகுப்புகள் நடத்தச் சில பெரியார்கள் முன் வந்துள்ளார்கள். இதனால் மிக்க பயன் விளையுமென்று நம்பு கிறோம். இதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு மிக அவசி யம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தேவார வகுப் பிற்குத் தவறாமல் அனுப்பித் தேவாரம் கற்றுக் கொள்ளச் செய்தல் வேண்டும். அதனால் பிள்ளைகள் பயனடைவது மல்லாமல் பெற்றோர்களும் பயனடைவார்கள்.

சைவ சமய வளர்ச்சிக்கு ஆவன செய்வதைப் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதோடு அமையாமல், நடை முறையில் கொண்டு வரக்கூடிய சில பணிகளைப் பற்றி நன்கு

ஆராய்ந்து தேர்ந்து அவைகளில் ஈடுபட்டு ஒத்துழைக்கும்படி உங்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

வரவேற்புக் கழகத்தினராகிய நாங்கள் இம் மூன்று நாட்களில் புரியவேண்டிய தொண்டுகளில் குறைபாடு நேருமாயின் அவற்றைப் பொருட் படுத்தாமல் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சைவ நன் மக்களே! மறுமுறையும் உங்கள் அனைவரையும் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

இங்ஙனம் :
வரவேற்புக் கழகத்தார்

திறப்புரை*

மெய்யன்புடையீர் !

சைவ சித்தாந்த மகா சமாஜ 52-வது ஆண்டு நிறைவு விழாவையும் சைவர் மகாநாட்டையும் துவக்கிவைக்கும் வாய்ப்பு இன்று எனக்களித்தமைக்கு மகிழ்ச்சியுறுகிறேன். இம்மகா நாட்டைத் துவக்கிவைப்பதென்பது எரியும் விளக்கைத் தூண்டுவது போலாகும். 51 ஆண்டுகளாகச் சைவப் பணியாற்றிவரும் இம்மகா சமாஜத்தின் விழாவைத் துவக்கி வைப்பதன் நோக்கம், பன்னாட்பணியால் நீங்கள் சோர்வடையாமல் புத்துணர்ச்சியோடு மேலும் பணியாற்ற ஊக்குவித்தலே யாகும். போர்க்களத்திற்குச் செல்லுமுன் சேனாதிபதி, படைகளை ஒன்று கூட்டி வீரச் சொற்களால் அவர்களை விளித்து ஊக்குதல் போன்றதே எனது பணியாகும்.

"மெய்யன்புடையீர் !" என்று நான் உங்களை விளித்துப் பேசியதன் கருத்து, அன்பலால் சிவமில்லை என்ற சைவ நெறியை மேற்கொண்டு ஒழுகுபவர்கள் அன்பாயிருத்தல் வேண்டுமென்பதே யாகும். "அன்பே சிவம்" என்பது சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவமாகும். இக்கருத்

*27-12-1957-ல் மயிலையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-வது ஆண்டுவிழாவின் திறப்பாளர்-அறநிலையப் பாதுகாப்பு மந்திரியார்-உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் ஆற்றியது.

தைத் திருமூலர் ஒரு திருமந்திரத்தில் நன்முக எடுத்துக் காட்டியருளியுள்ளார். அது,

" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் ;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ் தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே "

என்பதாம்.

" எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவ னென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு "

எனச் சைவநெறி கூறியிருப்பதே நமக்கும் பிறர்க்கும் நலம் தரும் நல்ல நெறியாகும். மனித வாழ்க்கைக்கும் சமய வளர்ச்சிக்கும் அன்பு இன்றியமையாததொரு பண்பாகும். உயிர்நிலையே அன்பின் வழியதென்றும், அன்பில்லா மனித உருவம் எலும்பின் மேல் போர்த்த தோல் உடம்பே யாகும் என்றும் இப்பதியின்கண் அவதரித்த திருவள்ளுவர்,

" அன்பின் வழியது உயிர்நிலை ; அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு "

என்னும் திருக்குறளில் காட்டியுள்ளார். இச் சைவநெறி எந்நாட்டவர்க்கும் வேண்டற்பாலது என்பதை உணர்த்தவே " எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி " யென்று மாணிக்க வாசக சுவாமிகள் சிவபெருமானைப் போற்றுகிறார்கள். எம் மதத்திலும் ஊடுருவி நிற்பது அன்புநெறியேயாகும். எனவே இது ஒரு சமரச நெறியுமாகும். இப்பொழுது நம் நாட்டி லுள்ள துன்பங்கள் யாவும் அன்பின்மை காரணமாக விளை வனவே யாகும். துன்பங்கள் நீங்கவேண்டுமானால் அன்பு வேண்டுமென்பதைப் பாரதியாரும் பின்வரும் பாடலில் விளக்கிக் காட்டுகிறார்கள் :

" துன்ப நினைவுகளும் சோர்வு பயமுமெல்லாம்
அன்பிலழியுமடி—கிளியே !
அன்புக் கழிவில்லை காண்."

"அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாறகண் வற்றல் மரந்தளிர்த் தற்று" என்று திருவள்ளுவர் கூறுவதுபோன்று அன்பில்லாத மக்கள் வாழுமிடம் பாலைவனமே யாகும்.

ஒருவர்க்கொருவர் கொண்டுள்ள பகைமை நீங்கினலல்லது பகவானை அடையமுடியாது என்பதைச் சிவபெருமானே உணர்த்துவதுபோல், சைவ சமயாசாரியராய் விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் பரவைநாச்சியார்க்கு மிடையே நேரிட்ட பிணக்கைத் தீர்த்துவைக்கச் சிவபெருமான் தூது சென்றதைக் காண்கிறோம். அதுகாரணம்பற்றியே சுந்தரர்பால் பகைமை கொண்ட ஏயர்கோன் கலிக்காம நாயனர், வயிற்றுவலியால் துன்பப்பட, அத்துன்பத்தை நீக்கச் சுந்தரரையே சிவபெருமான் அனுப்பியதாகத் திருத்தொண்டர் புராணத்தில் காண்கிறோம். அவ்வரலாறு என்ன உணர்த்துகிறது? பகைமை கொண்டால், சிவன்மேல் அன்பு பூண்ட அடியவர்களும் பிணி முதலியவற்றிற்கு ஆளாவார்கள் என்பது தேற்றம். நாட்டிற்கு நாடு பகைமை, மொழிக்கு மொழி பகைமை, இனத்திற்கு இனம் பகைமை இப்படிப்பட்ட பகைகள் நாட்டில் வளர வளர, புதிது புதிதான நோய்கள் இப்போது நம் இந்தியாவிற்கு மேல்நாட்டு நாகரிகத்துடன் வந்து கொண்டிருப்பதை அனுபவத்தில் காண்கிறோம். எத்தனை வித மதஸ்தாபனங்கள், ஆலயங்கள் இருந்தபோதிலும், மக்களிடை அமைதி பிறக்காமல், அமளியே பெருகிவருவதற்குக் காரணம் மக்களிடை அன்பான வாழ்க்கை இல்லாததேயாகும். அன்பு உண்மையன்பாக இருக்கவேண்டும். அன்பான சொற்களால் பேசிவிட்டுச் செய்கை அதற்கு மாருக இருப்பின் அது மெய்யன்பாகாது. மெய்யன்புடைய சைவர்களாகத் திகழவேண்டில், வாய்மை வேண்டும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானல் தடுத்தாட்கொள்ளப்பட்ட பெருந்தகை. அவரே வாய்மை தவறிய குற்றத்தால் தம் பார்வையை இழந்து பரமனை வேண்டிப் பாடினர் என்றல், சாதாரண மக்களாகிய நாம் தினந்தோறும் செய்துவரும் அப்படிப்பட்ட குற்றத்திற்கு என்ன தண்டனை கிடைக்கும்! சைவத் திருமுறைகளின் இறுதியான 12ம் திருமுறையாக விளங்கும் திருத்தொண்டர் புராணத்தில், சென்னைக்கு அண்மையில் வாழ்ந்திருந்த சேக்கிழார் பெருமான் இப்படிப்பட்ட பேருண்மைகளை நாயன்மார்களுடைய சரித்திரத்தில் எடுத்

துக் காட்டியுள்ளார். அப்படிப்பட்ட நூலைப் பிரமாணமாகக் கொண்டொழுகும் சைவ மக்கள் தூய்மையான அன்பு கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும். செயலினும் எண்ணத்திலும் அன்பின் பண்பு இருத்தல் வேண்டும்.

அன்பே சைவ நெறிக்கு அடிப்படைப் பண்பென்றும், சிவ புண்ணியத்தால் பெறப்படும் பண்பென்றும், அதுவே ஆர்வமாகவும், காதலாகவும், வேட்கையாகவும் வளரப்பெற்று இறைவனருளுக்கு நாம் பாத்திரமாக வேண்டுமென்றும் கண்ணப்ப நாயனார் சரித்திரத்தில் அழகாகச் சேக்கிழார் பெருமான் பின்வரும் பாட்டில் எடுத்துக் காட்டுகிறார் :

"முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி உள்ளத்தெழு பெருவேட்கை யோடும்"

அன்பு பெருகும் வகையில் காளத்தி மலைமீது ஏறிச் சென்றார் கண்ணப்ப நாயனார் என்று கூறுகிறார். வேட்கை கொண்டு என்பு நெக்குருகிப் பாடுவது ஜீவன்முத்தர்கள் இயல்பு. அப்படிப்பட்ட தெய்வ உணர்ச்சி வரவேண்டுமென் பதே சமயங்களின் கருத்தாகும். சைவ சமயத்தின் சிறப்பு, அப் பண்பாட்டை எந்த முறையில் வளரச் செய்ய வேண்டு மெனச் சரியை முதலிய வழிகளால் வகுத்துக் காட்டுதலே யாகும்.

எனவே, மெய்யன்பர்களே ! இப்படிப்பட்ட உயர் வுணர்ச்சிகளை நாடி, செயல் முறையில் அவற்றைக் கொண்டு வருவதற்கு ஏற்ற நிலைக்களமமைத்தலே மகாநாடுகளின் நோக்கமாகும். தீர்மானங்கள் கொண்டு வருதல் சுலபம். தீர்மானங்களைச் செயல்முறையில் கடைப்பிடித்தொழுகாவிடில் மகாநாட்டின் பயன் சிறந்ததாகாது. மகாநாடு கூடுதல் ஒரு சமய நோன்பென்றும் கொள்ளலாம். நோன்பென்பது இன்ன காரியங்களைச் செய்யவேண்டும், இன்ன காரியங்களைச் செய்யலாகாது என்று நோன்புக் காலங்களில் சங்கல்பித்துக் கொள்ளுதலாகும். அதுபோல் சமய வளர்ச்சிக்கும் மக்க ளுடைய இன்ப வாழ்க்கைக்கும் செய்ய வேண்டுவன யாவை

தவிர்க்கவேண்டுவன யாவையென்று தீர்மானித்து அதன்படி நடப்பதே இம் மகாநாட்டின் நோக்கமாக இருத்தல் வேண்டும்.

சைவம் என்றாலே தமிழ் மொழி நினைவுக்கு வரும். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்" திருஞான சம்பந்த சுவாமிகள், "மிகு சைவத்துறை விளங்க" அவதரித்தா ரென்று சேக்கிழார் பெருமான் கூறுவதினின்றும் தமிழ் மொழிக்கும் சைவ நெறிக்கும் உள்ள சம்பந்தம் நன்கு புலனாகும். ஆனால், சைவத் தமிழ் மக்களின் தொகையையும் இச் சமாஜ அங்கத்தினர்களது தொகையையும் ஒப்பிட்டு நோக்குவோமாயின், ஆயிரத்துக்கு ஒருவர்வீதமும் தேறுவது அரிதாகும். இது மிகவும் பிற்போக்கான நிலையை உணர்த்து வதாகுமே! இதுவரையில் நீங்கள் செய்துவரும் பணி போற் றத் தக்கதே யெனினும், அது போதியதல்ல என்பதை உணர்த்த விரும்புகிறேன். பேரறிஞர்களால் அமைக்கப்பட்டு இயங்கிவரும் இச் சமாஜத்தின் அங்கத்தவர்களுக்கு நான் கூறவேண்டுவது அதிகமில்லை. அவர்களுக்குள்ள பெரும் பொறுப்பை நினைப்பூட்டும் வகையில் எனது திறப்புரையில் இவ்வளவும் பேச அமைந்தது.

மற்றும் தமிழ்ப் பொதுமறை அருளிச்செய்த திருவள்ளு வர் அவதரித்த பெருமையும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாடல் பெற்ற பெருமையும், இன்னும் பல பெருமைகளும் உடையது இம் மயிலையம்பதி. இங்கு இம் மகாநாடு கூடியது மிகவும் பொருத்தமே யாகும். இந்த நிகழ்ச்சி இச் சமாஜ வளர்ச்சிக்கு ஓர் அறிகுறியாகுமென்று கொள்ளலாம். சமாஜ அங்கத்தினர்களின் தொகை மேன்மேலும் பெருகி, தமிழ் மக்களனைவரையும் தன்னகத்தே கொண்டு, அன்பான வாழ்க்கையை மக்களிடையே வளரச் செய்யத்தக்க முறை களில் திட்டங்கள் வகுத்து, அத் திட்டங்களின்படியே பணி யாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, இம் மகா நாட்டை இந்த நன்னாளில் துவக்கி வைக்கிறேன். இறைவன் திருவருளால் இவ் விழா இனிது நடைபெறுவதாக.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

52-ம் ஆண்டு அறிக்கை

நமது சமாஜம் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் முன்னிலையில் விசுவாவசு ௵ ஆனி௴ 24௳ (7-7-1905) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. சபைப்பதிவுச் சட்டப்படி 11-12-1915-ல் S. No. 6 of 1915-16 என்ற எண்ணோடு பதிவாயிற்று. சமாஜ விதிகள் அவ்வப்போது திருத்தங்களோடு வெளியிடப்பட்டுக், கடைசியாக 1955-ம் ஆண்டில் வெளிவந்தது. சமாஜத்தின் வெள்ளிவிழா 1930-ம் ஆண்டிலும் பொன்விழா சிதம்பரத்தில் 1955-ம் ஆண்டிலும் கொண்டாடப் பெற்றன. பொன்விழாவின்போது "பொன்விழா மலர்" ஒன்று வெளியிடப்பெற்றது. நமது சமாஜத்தின் நோக்கம், பணி, சைவசமய சிறப்பு, சைவப்பெருமக்களின் வாழ்க்கை முதலியன அடங்கிய அம்மலர் ஒவ்வொரு அங்கத்தினரும் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற பெருநோக்கத்துடன் அதன் விலை முக்கால் ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நோக்கம்

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்"

என்ற திருவள்ளுவர் உபதேச மொழிக்கிணங்க "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற பெரு நோக்குடன் பலதிறப்பட்ட பணிகளை நமது சமாஜம் செய்து வருகிறது. அவற்றுள் முக்கியமானவை :

(1) 1930-ம் ஆண்டுமுதல் பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சாத்திரங்களையும் அடக்க விலைச் சுத்தப் பதிப்புகளாகப் பல்லாயிரக் கணக்கில் நமது சமாஜம் வெளியிட்டுள்ளது. தமிழ் மக்கள் இல்லங்கள்தோறும் நமது சமாஜப் பதிப்புக்கள் மிளிர்கின்றன என்று கூறுதல் மிகையாகாது. இந்த ஆண்டு விழாவின் தொடக்க நாளாகிய இன்று திருவெம்பாவை திருப்பள்ளி யெழுச்சி மூலமும் உரையும் எட்டாம் பதிப்பாகவும், குகார்ச்சனைத் திருமந்திரம் மூன்றும்

பதிப்பாகவும், முருகன் முந்நூல் உரையுடன் முதற் பதிப்பாகவும் வெளி வருகின்றன.

(2) முப்பது ஆண்டுகளாக நமது சமாஜம் "சித்தாந்தம்" எனும் தமிழ் மாதப் பத்திரிகையை வெளியிட்டு வருகிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில் இருந்த சமாஜ அங்கத்தவர் தொகை 577, சேர்ந்தவர்கள் தொகை 101, நீங்கியவர் 118, இறுதியில் உள்ளோர் தொகை 560. அங்கத்தினரைச் சேர்க்க ஒவ்வொருவரும் உதவிபுரிதல் நலம்.

(3) சமாஜக் கூட்டங்கள் பல நடந்தன. நிர்வாக சபைக் கூட்டங்கள் ஏழும் உறுப்பினர்கள் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றன. விழாக் கூட்டங்கள் ஏழு நடைபெற்றன. அவற்றின் விவரம் அவ்வப்போது "சித்தாந்தம்" என்னும் சமாஜ பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

அவையுமன்றி நமது சமாஜ உபதலைவர் திருவாளர் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் ஆங்காங்கு வார வழிபாடு நடத்தி வருகின்றார்கள். சென்னைத் திருமயிலைக் கபாலீச்சரத்தில் அவர்கள் ஆரம்பித்து திங்கட்கிழமைதோறும் வார வழிபாடு நடந்துவருகிறது. நமது சமாஜ காரியதரிசியாயிருந்த திருவாளர் முத்துசாமிபிள்ளை, I.A.S. அவர்கள் சென்னையிலிருந்தபோது ஒவ்வொரு வார வழிபாட்டிலும் சொற்பொழிவாற்றி வந்தனர். அவர் சேரன்மகாதேவிக்கு Deputy Collector ஆக மாற்றப்பெற்றபின் இப்போது சமாஜப் பொதுக் காரியதரிசி அப்பொறுப்பை யேற்றுச் சொற்பொழிவாற்றி வருகின்றனர்.

ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் நமது சமாஜத்தை தொடங்கிவைத்தவர். ஆறு ஆண்டு விழாக்களில் அவர்கள் தலைமை தாங்கியுள்ளார்கள். அவர்களுடைய சொற்பொழிவுகளைத் திரட்டி இதுவரை 10 உபந்நியாசங்கள் சித்தாந்தத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் அவர்களுடைய உபந்நியாசக் குறிப்புகளைச் சேகரித்துக் கொடுக்கும் சைவர்களுக்கு எமது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

நூல்கள் வெளியீடு :

ஸ்ரீமத்பாம்பன்சுவாமிகளருளிய, நாலாயிரத் திவ்யப்பிரபந்த விசாரம், சிறுநூற்றிரட்டு, குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி.

மகாநாடுகள் :

1956 ஆம் டிசம்பர் 30-ம் தேதிமுதல் மூன்று நாட்களும் பெண்ணாகடத்தில் மெய்கண்டார் திருக்கோயிலுக்கருகி லுள்ள மாந்தோப்பில் மகாநாடு சிறப்பாக நடத்தப்பட்டது. இலங்கை மாஜி அமைச்சர் திரு. சு. நடேசபிள்ளை. பி.ஏ., பி. எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். சைவமங்கையர் மகாநாட்டிற்குத் திரு ச. கற்பகவள்ளி அம்மையார், பி.ஏ., பி. எஸ்.ஸி. (ஆனர்ஸ்) அவர்களும், சைவ இளைஞர் மகாநாட் டிற்குத் திரு. புலவர், முருகவேள், எம்.ஓ.எல். அவர்களும் தலைமை வகித்தார்கள்.

அம்மகாநாட்டைச் சிறப்புற நடத்தித் தந்த திருவாளர் ச. அரங்கசாமி பிள்ளை, திரு. இராதாகிருஷ்ண பிள்ளை முதலிய சைவப் பெருமக்களுக்கு நமது சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை ஹிந்து சமய அறநிலையப் பாதுகாப்பாளர் திருவாளர் உத்தண்டராம பிள்ளை, I. A. S. அவர்கள் உத்தர விட்டபடி, சமாஜத்தில் மாதந்தோறும் வெளியாகும் "சித்தாந்தம்" என்னும் பத்திரிகையை ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருமானமுள்ள தேவஸ்தானங்கள் வாங்கிப் பயன்படுத்த வேண்டுமென்பது. அவ்வுத்திரவின்படிக்கு இவ் வாண்டு 20-க்கு மேற்பட்ட தேவஸ்தானங்கள் இச் சமாஜ அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளார்கள். திருவாளர் உத் தண்டராம பிள்ளை, I. A. S. அவர்களுக்கு நமது சமாஜம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளது.

மற்றும் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துதவிய சைவப் பெருமக்களுக்கும், "சித்தாந்தம்" காலம் தாழ்த்தாது அச்சிட்டுத்தரும் சாது அச்சகத்தினர்க்கும் விழாக்களில் சொற்பொழிவாற்றிய அறிஞர்களுக்கும், சமாஜப் பணியை யேற்று நிர்வகிக்கும் சைவ அன்பர்களுக்கும், சைவர்கள் யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

இப்படிக்கு,

மா. ப. தியாகராசன், பொதுக்காரியதரிசி

சைவ சித்தாந்த மகா சமாஜ 52-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்கு

[1-12-56 முதல் 30-11-57 வரை]

வரவு	ரூ.	பை.	செலவு	ரூ.	பை.
ஆரம்பக் கையிருப்பு	26	80	சித்தாந்தம் அச்சுக்கூலி முதலியன	871	67
சாதாரண சந்தா	1390	25	போக்கு வரவு செலவு	46	57
ஆயுள் சந்தா	150	00	பாங்கியில் கட்டியது	507	94
தேர்வுக் கட்டணம்	2	00	பொக்கிஷதாரருக்குத் திருப்பிக்கொடுத்தது	150	00
புத்தக விற்பனை	303	23	முகவரித் தாள் அச்சு V. P. ஒட்டுக் கூலி முதலியன	167	53
தபால் வகை V. P.	108	73	காகிதம் முதலியன வாங்கியது	560	24
பலவகை வரவு	106	18	விற்பனைக்கு வாங்கிய புத்தகம் விலை	24	00
பாங்கி வட்டி	44	46	தபால் கூலி	75	33
இந்தியன் பாங்கில் வாங்கியது	306	00	விழாச் செலவுகள்	23	87
			காரியதரிசியிடம் கையிருப்பு	10	50
	2437	65		2437	65

சமாசப் பொருள் வலிவு : இந்தியன் பாங்கில் இவ்வாண்டு முடிவிலிருப்பது ரூ. 2299 37

மாஜி பொக்கிஷதாரர் திரு. T. K. சுந்தரம் பிள்ளை அவர்களிடமிருந்து வரவேண்டியது ரூ. 414 75

கையிருப்புப் புத்தகங்களின் மதிப்பு ரூ. 4360 00

மா. ப. தியாகராஜன்	M. C. சம்பந்த முதலியார்	S. நடராஜ முதலியார்	S. திருநாவுக்கரசு
செயலாளர்	மாதப் பரிசோதகர்	பொக்கிஷதாரர்	வருடப் பரிசோதகர்

சமாஜ மகாநாடு

நே. த. கிருஷ்ணசாமி, பி.ஏ., பி.டி.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 52-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மகாநாடுகள் சென்னை, மயிலாப்பூரில் டிசம்பர் 27, 28, 29 நாட்களில் சிறப்பாக நடைபெற்றன. சைவர் மகாநாட்டுக்கு மயிலைகிழார் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி. எல். அவர்களும், சைவ மங்கையர் மகாநாட்டுக்குத் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களும், சைவ இளைஞர் மகாநாட்டுக்குத் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ. அவர்களும் தலைமை வகித்தார்கள்.

'பெருமயானத்து நடம்புரிவார் நல்விழாப் பொலிவில்' சிறந்தது திருமயிலாப்பூர்; பூம்பாவை 'குடம் உடைந்து எழுந்த' பெருமையை யுடையது. உலகம் போற்றும் உத்தமர் திருவள்ளுவர் தோன்றி வளர்ந்ததும் மயிலையே. இப் பழம் பதியின்கண் இவ்வாண்டு சமாஜ மகாநாடுகள் நடைபெற்றமை பெருமையுடையதாகும். முதல் இரண்டு நாட்களும் மூன்றும் நாள் முற்பகலும் கூட்டம் "சாய் கான" சபைப் பந்தரில் நடைபெற்றது. மூன்றும் நாள் பிற்பகல் கூட்டம் இராஜராஜேஸ்வரி பாடசாலையில் நடைபெற்றது.

முதல்நாள் காலை 7-மணிக்குத் திருக்கபாலீச்சரத்தில் வழிபாடு நடைபெற்றது. சென்னை அறநிலையப் பாதுகாப்பு மந்திரி உயர்திரு எம். பக்தவத்சலம் அவர்கள் சைவர் மகாநாட்டைத் திறந்துவைத்தார்கள். அன்பர்கள் தேவார பாராயணத்துடன் மகாநாட்டுப் பந்தர்க்குச் சென்றார்கள். வரவேற்புக் கழகத் தலைவர் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம்.ஏ. அவர்கள் தலைவர் அவர்களையும், மற்றவரையும் வரவேற்றனர். தலைவர் அவர்கட்கு வரவேற்புரையைக் காஞ்சி-மெய்கண்டார் கழகச் செயலாளர் - திரு. திருஞானசம்பந்த முதலியார் அவர்களும், திரு. மணலி - இராமகிருஷ்ண முதலியார் அவர்கட்கு வரவேற்புரையைத் திரு. வடிவேலாயுதம் அவர்களும்,

திரு. ச. சிவகுமாரன் அவர்கட்கு வரவேற்புரையைத் திரு. புலவர் - முருகவேள் அவர்களும் வாசித்து அளித்தார்கள். திரு. மணலி - இராமகிருஷ்ண முதலியார் பி. ஏ. அவர்கள் சைவ இளைஞர் மகாநாட்டைத் திறந்துவைத்தார்கள். சைவர் மாநாட்டுத் தலைவர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல். அவர்களது பேருரையைத் திரு. பு. ரா. சுவாமிநாத முதலியார் எம்.ஏ., எல்.டி. அவர்கள் படித்தார்கள். இராவ்சாகிப் திருவாளர் நல். முருகேச முதலியார் பி. ஏ. அவர்கள் சமாஜத்தின் நோக்கத்தைப்பற்றியும், செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றியும் பேசினார். இளைஞர் மகாநாட்டுத் தலைமைப் பேருரையைத் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ. வாசித்தார். பொதுச் செயலாளர் சமாஜ அறிக்கையை வாசித்தார். இதோடு அன்றைய காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

பிற்பகல் நான்கு மணிக்குச் சைவர் மகாநாடு தொடங்கிற்று. சைவத் திருவாளர் ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் 'அங்கும் இங்கும்' என்பது பற்றிப் பேசினார்கள். இவ்வுடலோடு உயிர் சேர்ந்து வாழும் இவ் வாழ்வே ' இங்கு ' என்றும், ஆண்டவனோடு சேர்ந்து வாழும் வாழ்வே ' அங்கு ' என்றும் குறித்தார். இவ்விரு வாழ்விலும் ஆண்டவன் உயிருடன் உள்ளான். பெத்த நிலையில் ஆன்மாவில் கரந்தும், முத்திநிலையில் தன்னுள் ஆன்மாவைக் கரந்தும் ஆண்டவன் நிற்கின்றான் என்று அழகுபடப் பேசினார். வட்டுக்கோட்டை திரு. நாகலிங்கம் பிள்ளை ஜே.பி., யு எம்., அவர்கள் 'சமயப் பற்று' என்பதுபற்றிப் பேசினார்கள். அரசியல்வாதிகள் சமயக்கூட்டங்களில் நுழைந்து சமயத்தைக் கெடுக்கிறார்கள். ஆங்கிலம் படித்த பலர்க்குச் சமயத்தில் ஆழ்ந்த பற்றில்லாமல் போகிறது. ஒலிபெருக்கிகள் மன ஒருமைப்பாட்டுக்கு இடர் செய்கிறது என்று கூறி அவற்றை எவ்வாறு சமாளித்தல் வேண்டுமென்றும் விளக்கினார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தத்துவப் பேராசிரியர் திரு. எஸ். இராமலிங்கம் எம். ஏ. அவர்கள் ' சமயம் ஏன்' என்று தெளிவுபடப் பேசினார்கள். வந்த வழியையும், போகுமிடத்தையும் அறிதல் இல்லை. எனவே உள்ளபோதே நல்லதைச்

செய்தல்வேண்டும். அறிவாளிகளுக்கு இரண்டுவித வாழ்க்கை உண்டு. உண்மை உணர்வதற்கு முன் இருந்த வாழ்க்கையும், உண்மையை உணர்ந்த பிறகு ஏற்படும் மாறுபட்ட வாழ்க்கையுமாகும். "சைவமும் தற்கால நிலையும்" என்பது பற்றித் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி.ஏ., எல்.டி. அவர்கள் பேசினார்கள். தற்போதுள்ள தாழ்ந்த நிலை மாற அவர்கள் பல வழிகளைக் கூறினார்கள்.

இரண்டாம் நாள் முற்பகலில் சைவ மங்கையர் மகாநாடு நடைபெற்றது. காலை 7 மணிக்கு வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு நடைபெற்றது. பிறகு மகாநாட்டுப் பந்தரில் கூட்டம் தொடங்கிற்று. திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்கள். தலைமை வகிக்க இருந்த திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார், எம். எல். சி. வர இயலாமையால் திறப்பாளரே தலைமை வகித்தார்கள். திருமதி ஆ. மங்கையர்க்கரசி அம்மையார் வரவேற்புரையை வாசித்தார்கள். 'பெண்மணித் தொண்டர்' என்பது பற்றித் திருமதி கற்பகவல்லி சோமசுந்தரம் அவர்களும், 'ஆருதாரம்' என்பது பற்றிச் சைதை திருமதி பாப்பாத்தி அம்மாள் அவர்களும், 'தெய்வீக வாழ்க்கை'யைப் பற்றித் திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அவர்களும் பேசினார்கள். இறுதியாகத் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் எம். ஏ. அவர்கள் பெண்கள் செய்யவேண்டிய சைவத் தொண்டைப் பற்றி விளக்கினார்கள்.

பிற்பகல் 4-மணிக்குச் சைவர் மகாநாடு தொடங்கிற்று. புலவர் திரு. முருகவேள், M.O.L. அவர்கள் 'அகப்பொருளில் அருட்பொருள்' என்பது பற்றிப் பேசினார்கள். தாம் பெற்ற சிவானுபவத்தை எல்லாரும் பெறவேண்டும் என்ற கருணையாலேயே மணிவாசகர் திருக்கோவையாரைப் பாடினார். கோவையாரின் நயங்கள் திறம்பட விளக்கப்பட்டன. 'திருக்குறளும் சைவ சித்தாந்தமும்' என்னும் பொருளைப் பற்றிப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. நடேச நாயக்கர் எடுத்துக்கொண்டு திருக்குறள் எவ்வாறு சைவ சித்தாந்தத்தை விளக்குகிறது என்று விவரித்தார்கள். பின்னர்,

திருப்பாதிரிப்புலியூர் - டாக்டர் தேவராஜ முதலியார் அவர்கள் ' திருமந்திரம் கற்கும் நெறி ' என்று எடுத்துக் கொண்டு திருமந்திரத்துக்கும், சித்தர் பாடலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி விளக்கமாகக் கூறினார்கள். இறுதியில் ' நாவுக்கரசும் பாவின் நயமும் ' என்ற பொருளில் அப்பரின் அருங்குணங்களைத் திரு. வடிவேலாயுதம் பிள்ளை எம். ஏ. அவர்கள் விளக்கினார்கள் ; அகச்சான்றாக உள்ள அவர்தம் தேவாரப் பாக்களின் நயங்களை எடுத்துக்காட்டினார்கள்.

மூன்றாம் நாள்—ஞாயிற்றுக்கிழமை—காலை 9-மணிக்குச் சைவ இளைஞர் மகாநாடு தொடங்கிற்று. மகாநாட்டுத் தலைவர் திரு. ச. சிவகுமாரன் எம். ஏ. அவர்கள் முன்னுரைக்குப்பின் திரு. R. வேங்கடகிருஷ்ண அய்யரின் மகன் சுமார் எட்டு வயதுள்ள கிருஷ்ணன் 'கடவுள் வழிபாடு' என்பதுபற்றிப் பேசினான். அவையிலிருந்த அனைவரும் பெருவியப்போடு அவன் பேசியதைக் கேட்டு அச்சிறு பிள்ளையை ஆசீர்வதித்தனர். திருமதி சௌந்தரம் கைலாசம் அம்மையார் புத்தகங்கள் வாங்கிக்கொள்ள அச்சிறுவனுக்குப் பத்து ரூபாய் கொடுத்து அவனை ஆசீர்வதித்தனர். அதன்பின்னர் ' அத்துவித மெய் ' என்பது பற்றித் திரு. மெய்கண்டசிவமும், ' சிவபெருமான் கருணை ' என்பது பற்றித் திரு. ந. தி. சுப்பிரமணியமும், ' கடவுள் ' என்பது பற்றித் திருமதி சௌந்தரம் கைலாசம் அம்மையாரும், ' இறை நம்பிக்கையும் வழிபாடும் ' என்பது பற்றித் திரு. திருஞானசம்பந்தனும், திரு A. பாலசுப்பிரமணியன் பொதுவாக மாணவர்களைப் பற்றியும், திரு. மு. ந. மாசிலாமணி சிவபெருமான் தன்மையைப் பற்றியும், ' சைவ சித்தாந்தத்தின் சில கருத்துக்கள் ' என்பது பற்றித் திரு. கு. இராமலிங்கமும், ' சைவ சித்தாந்தத்தில் இளைஞர் தொண்டு ' என்பது பற்றிப் புலவர் திரு. மு. கு. புண்ணியகோடி அவர்களும் பேசினார்கள். திரு. சிவயோகீஸ்வர அடிகள் குருவின் அவசியத்தைப் பற்றியும், சிவதீக்கையைப் பற்றியும் பேசினார்கள். தலைவர் பின்னுரையோடு கூட்டம் இனிது முடிந்தது.

பிற்பகற் கூட்டம் தென்னண்டை மாடவீதியிலுள்ள இராஜராஜேசுவரி பாடசாலையில் மாலை 4-மணிக்குத் தொடங்கிற்று. சித்தாந்தப் பிரசங்காமிர்தம் திரு பூ. சமரபுரி முதலியார் அவர்கள் 'விநாயகர் இறைவரா' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்; தக்க ஆதாரங்களுடன் விநாயகர் இறைவரே என்றும் வலியுறுத்தினார்கள். தர்மபுர ஆதீனமடத்து ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் சமாஜ வளர்ச்சியை வற்புறுத்திப் பேசினார்கள். சித்தாந்த ரத்நாகரம் திரு. க. வச்சிரவேல் முதலியார் பி.ஏ., எல்.டி. அவர்கள் 'உண்மை விளக்க' நூலைப்பற்றி விரித்துரைத்தார்கள்; அறியாமையோடு மாயை சேர இரண்டையும் எவ்வாறு ஆண்டவன் போக்குகின்றான் என்பதை விளக்கமாகக் கூறினார்கள். தலைவர் கருத்துரைக்குப்பின் பொதுக் காரியதரிசி நன்றி கூறினார்கள். வெளியூரிலிருந்து வந்திருந்த அன்பர்களுக்கு உண்டியளிக்கப் பொருளுதவியவர் மயிலை கபாலி டாக்கீஸ் உரிமையாளர் - திரு. ம. சி. சம்பந்த முதலியார் அவர்கள். மற்றவர்களும் மனமுவந்து பொருள்தர 52-ஆம் ஆண்டின் நிறைவுவிழாவும், மகாநாடுகளும் கற்பகாம்பாள் சமேதராகிய கபாலீசுவரப் பெருமான் திருவருள் துணையால் இனிது நிறைவேறின.

பெரியபுராண மூலம்

சமாஜ மூன்றாம் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும் பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு. விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

கிடைக்கும் இடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1